
Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 தை – 28 ஆம் நாள் ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 30 (10.02.2005) வியாழக்கிழமை இதழ்: 133



# கௌசல்யன் கொலைக்கு ஐ.நா. செயலர் கண்டனம்!

(நியூயோர்க்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கொபி அனான் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வெலிக்கந்த பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் லெப்.கேணல் கௌசல்யன் மற்றும் மேஜர் புகழன், மேஜர் செந்தமிழ், 2 ஆம் லெப். விதிமாறன், நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு மற்றும் அவரது சாரதி ஆகியோர் கொல்லப்பட்டமை தொடர்பாகவே ஐக்கிய நாடுகள் சபை செயலர் இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் கொபி அனானின் பேச்சாளர் தகவல் வெளியிடுகையில் – (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தலைமையில் முக்கிய பிரமுகர்கள் கிழக்கிற்கு!



கிளிநொச்சியில்..



மட்டக்களப்பில்..

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவினர், லெப். கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளின் இறுதி வணக்க நிகழ்வில் பங்கேற்பதற்காக நேற்று மட்டக்களப்புக்கு புறப்பட்டுச் சென்றனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் விமானப்படை ஹெலிகொப்ரர் மூலமாக, நோர்வே அனுசரணையாளர்களின் வழித்துணையுடன் கிளிநொச்சியிலிருந்து இவர்கள் புறப்பட்டனர்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, தமிழீழ நிதிப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு!

(மட்டக்களப்பு, திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு உட்பட ஆறுபேர் படுகொலையான சம்பவத்தைக் கண்டித்து கிழக்கு மாகாணத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பில் போக்குவரத்து சேவைகள் எவையும் இடம்பெறவில்லை. பாடசாலைகள், அரச அலுவலகங்கள் மூடப்பட்டிருந்ததுடன் பொதுச்சேவைகளும் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஹர்த்தால் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டன. திருமலை மாவட்டத்திலும் தமிழ்ப் பிரதேச வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன் பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களின் செயற்பாடுகளும் இடம்பெறவில்லை.

இதேவேளை, இந்தப் படுகொலைகளைக் கண்டித்தும் இவ்வாறான கொலைகள் இனிமேலும் இடம்பெறாமல் உறுதிப்படுத்துமாறு கோரியும் வாகரைப் பிரதேச மக்கள் இன்று பிற்பகல் கண்டனப்பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு பனிச்சங்கேணி மற்றும் கதிரவெளி ஆகிய இரு இடங்களிலிருந்து ஆரம்பமாகும் ( 12 ஆம் பக்கம் பார்க்க)

பேபி 81 குழந்தைக்கு



கிளிநொச்சியில்..



மட்டக்களப்பில்..

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவினர், லெப். கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளின் இறுதி வணக்க நிகழ்வில் பங்கேற்பதற்காக நேற்று மட்டக்களப்புக்கு புறப்பட்டுச் சென்றனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் விமானப்படை ஹெலிகொப்ரர் மூலமாக, நோர்வே அனுசரணையாளர்களின் வழித்துணையுடன் கிளிநொச்சியிலிருந்து இவர்கள் புறப்பட்டனர்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, தமிழீழ நிதிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டன. திருமலை மாவட்டத்திலும் தமிழ்ப் பிரதேச வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன் பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களின் செயற்பாடுகளும் இடம்பெறவில்லை.

இதேவேளை, இந்தப் படுகொலைகளைக் கண்டித்தும் இவ்வாறான கொலைகள் இனிமேலும் இடம்பெறாமல் உறுதிப்படுத்துமாறு கோரியும் வாகரைப் பிரதேச மக்கள் இன்று பிற்பகல் கண்டனப்பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு பனிச்சங்கேணி மற்றும் கதிரவெளி ஆகிய இரு இடங்களிலிருந்து ஆரம்பமாகும் ( 12 ஆம் பக்கம் பார்க்க)

# கதறி அழுது வித்துடல்களுக்கு ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி!

(மட்டக்களப்பு)

வெலிக்கந்த பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகளின் வித்துடல்களுக்கும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுக் காலைவரை மாவீரர்களின் வீடுகளில் வைக்கப்பட்டிருந்த வித்துடல்கள், பொதுமக்களின் அஞ்சலிக்காக கொக்கட்டிச்சோலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு இராமகிருஷ்ணமிஷன் பாடசாலை மண்டபத்தில் வைக்கப்பட்டன.

பின்னர் அங்கிருந்து பழுகாமத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த வித்துடல்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

நேற்று நண்பகல் கண்டுமணி மகா வித்தியாலய மண்டபத்திலிருந்து பட்டிருப்பு பாலம் வழியாக அம்பாறை மாவட்டத்துக்கு வித்துடல்கள் எடுத்துச்செல்லப்பட்டு,



கல்முனை, அக்கரைப்பற்று, காரைதீவு, திருக்கோவில் ஆகிய இடங்களிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகங்களில் நேற்று மாலைவரை பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இரவு களுவாஞ்சிக்குடிக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

இன்றுகாலை வரை களுவாஞ்சிக்குடியிலுள்ள விடுதலைப் புலிகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேபி 81 குழந்தைக்கு மரபணுப் பரிசோதனை!

(கொழும்பு)

சுனாமி பேரனர்த்தத்தில் அனாதரவான நிலையில் இருந்து காப்பாற்றப்பட்டு கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பேபி 81 என்ற நான்கு மாதக் குழந்தையின் பெற்றோர் யாரென கண்டுபிடிப்பதற்காக நேற்று கொழும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளவரசர் சாள்ஸ் இலங்கை வருகிறார்!

(லண்டன்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ், இந்த மாத இறுதியில் இலங்கை வரவுள்ளாரென தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இளவரசர் சாள்ஸ் இலங்கை வருவதற்கான திகதி இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் கறுப்புப்பட்டியுடன் சபையில்

(கொழும்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட ஆறு பேர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்புப்பட்டி அணிந்து நாடாளுமன்றத்துக்குச் சென்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால நிலையை நீடிக்க அரசு திட்டம்!

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களிலும் அவசரகால நிலையை நீடிப்பது தொடர்பான விவாதம் வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற கட்டடத்தில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதற்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

Your friend in the skies...

# அஞ்சல் அதிபரை இடமாற்றுமாறு கோரி

# ஒரு மணி நேர அடையாள வேலை நிறுத்தம்

## அகில இலங்கை அஞ்சல் தந்தி சேவையாளர் சங்கம் அறிவிப்பு

காங்கேசன்துறை அஞ்சல் அதிபரை இடமாற்றுமாறு விடுத்த கோரிக்கையை அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் இழுத்தடித்து வருவதைக் கண்டித்தும் இடமாற்றத்தினை உடனடியாக அமுல்படுததுமாறு கோரியும் அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்பு சேவையாளர்கள் இன்று ஒரு மணித்தியால அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். இந்த வேலை நிறுத்தத்தில் யாழ். குடாநாட்டின் அனைத்து அஞ்சல், தந்தி, தொலைத் தொடர்புகள் சேவையாளர்களையும் இணைந்து கொள்ளுமாறு அகில இலங்கை அஞ்சல், தந்தி, தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இன்று காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை யாழ்.பிரதம தபால் நிலைய அஞ்சல், மற்றும் தந்தித் தொடர்பாளர்களையும், ஏனைய தபால் நிலையங்களின் அஞ்சல் மற்றும் தந்தித் தொடர்பாளர்களையும் அடையாள வேலை நிறுத்தத்தில் பங்குகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன் துறைஅஞ்சல் அதிபர் அங்கு பணியாற்றும் ஊழியர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக சங்கத்திற்கு ஊழியர்கள் செய்திருந்த முறைப்பாட்டினை அடுத்து, சங்கத்தின் பிரதிநிதிகள் வடமாகாண அஞ்சல்மா அதிபர், மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ஆகியோரிடம் சந்தித்துக் கலந்துரையாடிய போதும், இடமாற்றம் செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் மாவட்ட அஞ்சல் அத்தியட்சருக்கு இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டது.

இதனை அடுத்து இடமாற்றத்திற்கான கடிதம் சம்பந்தப்படவர்களுக்கு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அனுப்பியிருந்தார் என்றும், தென்னிலங்கையிலுள்ள தொழிற் சங்கங்களின் தலையீட்டை அடுத்து இந்த இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத்தெரிவித்த அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம், வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் மற்றும் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ஆகியோரிடம் இது தொடர்பாக கதைத்து எந்தச் சாதகமான நிலையும் ஏற்படாததை அடுத்து இந்த முடிவினை எடுத்துள்ளதாகவும், தமது கோரிக்கைகள் தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்பட்டால் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுடுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 3ஆம் வருட உள்ளகப்பயில்வு ஆசிரிய மாணவர்களுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவு நாளை மறுதினம் வழங்கப்படும் என பீடாதிபதி அறிவித்துள்ளார்.

## அடிக்கல் நாட்டல்

வடக்கு - கிழக்கு புற்றுநோய் உதவிச்சங்கம் புற்றுநோயாளர்களுக்கான காப்பகம் ஒன்றினை சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் அமைக்கவுள்ளது.

இதற்கான அடிக்கல்லினை நாளை நண்பகல் 12 மணிக்கு புற்றுநோய் உதவிச்சங் கத்தைச் சேர்ந்த எஸ். தர்மகுல சிங்கம் நாட்டிவைக்கவுள்ளதாக தெரிவிக்கபடுகிறது.

## வணிகருக்கான கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட வணிகர் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு பளையிலுள்ள வருவாய்த்துறை செயலகத்தில் சொ.வெற்றியரசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சகல செயற்குழு உறுப்பினர்களையும் கலந்துகொள்ளும்படி செயற்குழு செயலாளர் கேட்டுள்ளார். (116)

## விளையாட்டு விழா தொடர்பான கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கான விளையாட்டு விழா சம்பந்தமான கலந்துரையாடல் இன்று காலை 10.30 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு தென்மராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட சகல பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்களும் கலந்து கொள்ளமுடியும் என்று பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார். (25)

## இல்ல மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சறோஜினி தேவி கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கவுள்ளார்.


## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை கிழக்கு, துர்க்கை அம்மனுக்கு பின்புறம் 7 பரப்பு காணி பனைமரங்களுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

வீடியோ சிந்து, உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
T.P. No: 0776 212612

(C/3810)

## அரசாங்க அறிவித்தல்

### யாழ்.மாவட்டச் செயலகம்

### 2005ஆம் ஆண்டிற்கான பொருட்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ் மாவட்ட செயலகத்திற்கு பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்ப படிவங்களை மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி. ப 4.45 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2005.02.28ஆந் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் விலாசமிடப்பட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பொருட்கள் சேவைகள் வழங்குநர்களை பதிவுசெய்தல் எனக்குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

1. கணினி, நிழற்பிரதி இயந்திரம், தட்டச்சு இயந்திரம், பக்ஸ் இயந்திரம் என்பன வழங்குதல், அவற்றின் உதிரிப்பாகங்கள் வழங்குதல் மற்றும் அவற்றை திருத்தம் செய்தல்.
2. மோட்டார் வாகனங்களுக்குரிய உதிரிப்பாகங்கள் வழங்கல் மற்றும் அவற்றை திருத்தம் செய்தல்.
3. காகிதாதிகள், எழுது பொருட்கள் வழங்குதல்.
4. பாவனை பொருட்கள் (ஈர்க்கில் தடி, தும்புத்தடி, சவர்க்காரம், விம், காப்பிக், பைனோல், குளோரின் முதலியன) வழங்குதல்.
5. மரத்தளபாடங்கள் வழங்குதலும் திருத்தமும்.
6. உருக்கு தளபாடங்கள் வழங்குதலும் திருத்துதலும்.
7. கட்டட திருத்தம் செய்தல், திருத்தத்திற்குரிய பொருட்களை வழங்கல்.
8. பீங்கான் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் என்பவற்றை வழங்கல்.
9. மின் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் வழங்கலும், திருத்துதலும்.
10. மின்னிணைப்பு திருத்த வேலைகள்.
11. நீர் வழங்கு பொருட்கள் வழங்குதலும் அவற்றின் திருத்த வேலைகளும்.
12. இறப்பர் முத்திரைகள் செய்து வழங்குதல்.
13. சீருடைத் துணிகள் மற்றும் துணிவகைகள் வழங்குதல்.
14. மின் பிறப்பாக்கிகள், மின்மோட்டார், நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்குதலும் அவற்றின் திருத்த வேலைகளும்.

கே. கணேஸ்,
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலரும்
யாழ்ப்பாண மாவட்டம். (C/3808)

## அரசாங்க அறிவித்தல்

### யாழ். மாவட்ட செயலகம்

### வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி - 2005

யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள கீழ் குறிப்பிடப்படும் வாகனங்களை சேவிஸ் செய்வதற்கான கோள்வி கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும் விண்ணப்பப் படிவத்தினையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.45 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை, மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு, மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம் என குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியிலோ 2005.02.28 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும் அன்றைய தினம் பி.ப.3 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப் பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

வாகனங்கள் விபரம்

- ☆ பிக்கப்
- ☆ வான்
- ☆ கார்
- ☆ மோட்டார் சைக்கிள்
- ☆ லொறி
- ☆ முச்சக்கரவண்டி (Auto)

கே. கணேஸ்
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்
யாழ்ப்பாண மாவட்டம். (C/3809)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், நமீதா, மும்தாஜ் நடித்த
மகா நடிகன்
கா.நே. (பு.நே) 11.00. 2.45. 6.00

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
விஜய், திரிஷா மற்றும் பலர் நடித்த
திருப்பாச்சி
காட்சி நேரம்: 10.30, 230, 6.30, 9.30 பு.நே.
12.02.2005 முதல் M. குமரன் Son of மகாலட்சுமி
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
பார்த்திபன், நிச்சா பட்டேல், வடிவேலு
இன்னும் பலர் நடித்த
காதல் கிறுக்கன்
கா.நே. (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்



4 ஆவது வெற்றிவாரமாக
தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன்
பு.நே. 11.00. 3.00. 7.00. 10.00
அடுத்த வெளியீடு திருப்பாச்சி

யாழ்ப்பாணம்



இன்று மட்டும்
சரத்குமார் (இரு வேடம்) நயன்தாரா,
லட்சுமி, வடிவேலு, பிரகாஸ்ராஜ், செந்தில் நடித்த
ஐயா
பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
நாளை முதல்
அஜித் திரிஷா நடித்த ஜி

## அழைப்பு

யாழில் கம்பியூட்டர் மாணவர்களிடத்தே நன்மதிப்பைப் பெற்ற **SCC (Soft View Computer College)** நிறுவனம் இலத்திரனியல் துறையில் புதிய மைல்கல் பதிக்கும் நோக்கில் ஒரு பிரவாகமாக **CeSCO** என்ற நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

என்றும்போல் எமக்கு தூணாகச் செயற்படும் மாணவர்கள், வாடிக்கையாளர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சகலரும் உவகையுடன் வருகை தந்து சிறப்பித்து வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைபவம் நேரம்: 9.30 – 10.00
காலம்: 11.02.2005
இடம்: 56/15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி பின்புறம்)

இங்ஙனம்
SCC நிறுவனம்

A place for Bright
Computer & electronics
Solution Company

ஒரே கூரையின் கீழ் கம்பியூட்டர், எலக்ரோனிக்ஸ் மற்றும் நெற்வேர்க்கிங் பொருட்கள் அதுவும் கொழும்பு நிர்ணயவிலையில்... இந்திய பொறியியல் துறையில் அதி உன்னத எலக்ட்ரானிக்ஸ் அன்ட் கம்யூனிக்கேசன் துறையில் முதன்மை எஞ்சினியரிங் பட்டம் பெற்ற பொறியியலாளரின் நேரடிக் கண்காணிப்பில் உருவாக்கப்படும் ஒரு உன்னத நிறுவன வழங்கல்கள் வெகுவிரைவில் உங்கள் கைகளில்....

A Bright solution providing centre

எதிர்பாருங்கள்!
அறிமுக சலுகைகள் பற்றிய விபரம் நாளை தினசரியில்

**Our Special packages**

- New 550, 600, 733, 800, 1GHz Compaq PIII 128 SDRAM, 10GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, 15" color Monitor, Keyboard, Mouse **Rs. 32,000/- முதல்**
- New PIV 128 SDRAM, 40GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, ATX Tower with Front USB & Audio, 15" color Monitor, Keyboard, Mouse **Rs. 48,900/- முதல்**
- தரமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் TV, VCR மற்றும் CD, DVDகள் @ Colombo based price

இல்லை என்று எதுவுமில்லை
**CeSCO** A Computer & Electronics Solution Company for your tasty knowledge bite. A PLACE for All Computing, Electronics & Networking

கம்பியூட்டர் துறையில் எந்தவொரு எலக்ரோனிக் பொருட்களையும் இணைக்க முடியும் அதற்குரிய ஆராய்ச்சி, மல்டிமீடியா சொலூசன், எலக்ரோனிக்ஸ் பகுப்பாய்வுகள், திருத்தங்கள், புதுப் பொருட்கள் உருவாக்கம் மிக்ஸ்ட் எலக்ட்ரானிக்ஸ் எனப்படும் அனலக், டிஜிற்றல் சேர்ந்த இயக்கங்கள் உடனுக்குடன் உங்கள் முன்னிலையில் கைதேர்ந்த அனுபவ முதிர்ச்சி பெற்றவர்களின் ஆய்வுக்கூடாகக் கொடுக்கப்படும்.

**Never Fever Against Technology**

*All with 3 years immediate Replacement warranty

**Knowledge beyond the technology. That's CeSCO**

**Real imported products @ Lower Price**

காலம் எப்போதும் கனிந்திருப்பதில்லை. சகல எலக்ட்ரானிக்ஸ் பொருட்களும் ஒரே இடத்தில்... புதுமை அதுவும் எலக்ட்ரானிக்ஸ் துறையில் புதுமை. கொழும்பு நிர்ணய விலையில் எமது தாயகத்தில் உலகெங்கும் ஒரே தராதரப்படுத்தப்பட்ட விலையில் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள்

தரம் தராதரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்

**CeSCO** 56/15, ஸ்ரான்லி வீதி
இலங்கை வங்கி பின்புறம்,
பழைய போஸ்ட் ஒவ்விஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

# தாக்குதலை நடத்தியவர்கள் சடலங்களை அப்புறப்படுத்தினர்!

## லொறியில் சென்றவர் சாட்சி

லெப்.கேணல் கௌசல்யன் மற்றும் அவருடன் பயணம் செய்தவர்கள் மீது தாக்குதல் நடத்திய சீருடைதாரிகள், உடனடியாகவே கொல்லப்பட்டவர்களின் சடலங்களையும், காயமுற்றவர்களையும் அங்கிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் வேகமாக ஈடுபட்டதாக வெலிக்கந்த தாக்குதலை நேரில கண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்தபோது லொறி ஒன்றில் பயணம்செய்த ஒருவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளிகையில் மேலும் கூறியிருப்பதாவது -

லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்டோர் பயணம்செய்த வாகனத்தின் மீது தாக்குதல் நடத்திய இராணுவ சீருடையினர் வீதியோரத்தில் கொல்லப்பட்டவர்களையும், சேதமடைந்த வாகனத்தையும் உடனடியாக அப்புறப்படுத்தியதுடன், அந்த வீதியூடாகப் பொதுமக்கள் போக்குவரத்து மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளையும் துரிதகதியில் மேற்கொண்டனர் எனக் கூறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் இராணுவ அதிரடிப்படையினரின் நிலைகள் காணப்படுகின்றன.

இந்தத் தாக குதலை இராணுவ அதிரடிப்படையினரே மேற்கொண்டதாகவும், தாக்குதலை நடத்திவிட்டுக் கொல்லப் பட்டவர்களையும், காயப்பட்டவர்களையும் உடனடியாக அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டதாகவும் நேரில் கண்டவர்கள் பலர் தெரிவித்தனர்.

சுமார் 100 அதிரடிப்படையினர் பொதுமக்கள் போன்று சிவில் உடையில் சம்பவம் நடைபெற்ற ஒரு சில வினாடிகளில் அந்த இடத்தில் காணப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் மீதும், அவர்கள் பயணம்செய்த வாகனம் மீதும் தாக்குதல் நடத்தப்படுவதற்கு இரண்டு மணித்தியாலங்கள் முன்னதாக - லெப்.கேணல் கௌசல்யன் உட்பட மூன்று போராளிகள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பு செய்திகளை வெளியிடத் தொடங்கியதாகவும் கூறப்படுகிறது.

மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசலயன், மதிமாறன், குமணன் ஆகியோர் கருணா குழுவினரால் கொல்லப்பட்டதாக அரச இராணுவ தரப்பினர் ஆங்கில ஊடகங்களுக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

இந்தத் தகவல் இலங்கை நேரப்படி பிற்பகல் 6 மணியளவில் பரிமாறப்பட்டது. அதேநேரம் கௌசல்யனுடன் இறந்த போராளிகளின் பெயர் வேறாகவே இருந்தது. எனினும், மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் பயணம் செய்த வாகனம் இரவு 7.45 அளவில் தாக்குதலுக்கு உள்ளானதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இன்னொருவர் இறந்ததாகவும் இராணுவம் தகவல்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைத் தவணைக் காலங்களில் கல்வி அமைச்சு மாற்றம் செய்துள்ளது

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஜுன் மாதம் 6 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருப்பதால், பாடசாலை தவணைக் காலங்களில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சகல அரசாங்கப் பாடசாலைகளும் முதலாவது தவணை விடுமுறைக்கென - ஏப்ரல் 9 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை மூடப்பட்டு, ஏப்ரல் 25 ஆம் திகதி இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்படும்.

இரண்டாம் தவணை ஜுன் மாதம் 30 ஆம் திகதி முடிவடைந்து, விடுமுறை 4 ஆம் திகதி தொடக்கம் ஜுலை மாதம் 3 ஆம் திகதி வரை இடம்பெறும்.

மூன்றாவது தவணையில் இரண்டு வகுப்புத் தொடர்கள் இடம் பெறும்.

முதலாவது தவணையில் முதலாம் வகுப்புத் தொடர் ஜுன் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகி, செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை தொடரும்.

மாணவர்களுக்கு செப்ரெம்பர் 17 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை குறுகிய கால விடுமுறையாக விடப்படும்.

இரண்டாம் வகுப்புத் தொடர் செப்ரெம்பர் 26 ஆம் திகதி முதல், டிசம்பர் 9 ஆம் திகதி வரை நடத்தப்படும். வருட இறுதி விடுமுறை டிசம்பர் 10 ஆம் திகதி தொடக்கம் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி வரை இடம்பெறும்.

# ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்



(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வேறு பிரதேச மக்களை நான் சந்தித்துள்ளேன். அத்துடன் நான் முல்லைத்தீவு மக்களையும் சந்தித்தேன். இரண்டுக்கும் இடையே நிச்சயமாக பாரிய வேறுபாடுகள் உள்ளன.

இந்தப் பகுதி மக்கள் துயரத்திலிருந்து மீண்டெழும் தன்மை என்னை உயர்ந்தளவில் பிரமிக்க வைத்தது. என ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேட் ஈவன்ஸ் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது தெரிவித்தார்.

யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு சென்ற அவர் - சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவிற்குச் சென்று அழிவுகளைப் பார்வையிட்டார்.

இதன் பின்னர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு, மற்றும் மீள்கட்டுமானத் திட்டங்கள் புலம் பெயர்ந்த தமிழ் மக்களால் வழங்கப்படும் நிதியின் மூலம் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்பது தொடர்பாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சுருக்கமாக விளக்கமளித்தார்.

இந்தச் சந்திப்பில் நிதித்துறைப் பொறுப்பாளர் பரா, சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் பங்கேற்றனர்.

# அனர்த்த முகாமைத்துவ ஊழியர்கள் சுய விருப்பின் பேரில் ஓய்வு பெறலாம்

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவ உதவிச் சேவையில் பணியாற்றுவதற்கு விருப்பமில்லாத அரச ஊழியர்கள்- தமது விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுச் செல்லக்கூடியவிதமாக, ஓய்வூதியத் திணைக்களம் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி - எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் கணககுப் பதிவாளர், காசாளர் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் ஆகிய ஆறு பதவிகளை நீக்கிவிட்டு. கடந்த டிசம்பர் முதலாம் திகதி முதல் அனர்த்த முகாமைத்துவ உதவிச் சேவை ஏற்படுத்தப் பட்டது.

இந்த சேவையில் பணியாற்ற விருப்பமில்லாத அரச ஊழியர்கள்- ஓய்வு பெற்றுச் செல்லலாமெனவும், பத்து வருடகாலம் தமது சேவைக் காலத்துக்கு மேலதிகமாக 5 வருடம் சேர்க்கப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்படுமென ஓய்வூதிய திணைக்களப் பணிப்பாளர் திலகரட்ண தெரிவித்தார்.

இந்த ஊழியர்கள் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு 55 வயது வரை கடமையில் இருக்க வேண்டியதிலலையெனவும், ஓய்வூதியம் பெற்றுச் செல்லும் நாளிலிருந்து ஓய்வூதியம் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# வெலிகந்த தாக்குதலுக்கு அரசே பதில்கூற வேண்டும்

## மனோ கணேசன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் இப்படியான சம்பவம் ஏற்பட்டால், மக்கள் வெகுண்டெழுந்து போராடத் தயங்கமாட்டார்கள் என்று, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தச் சம்பவத்துக்கு அரசாங்கமே பதில்சொல்லவேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்துக்குப் பின்னர் நிவாரணம் வழங்கும் விடயங்களில் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் புரிந்துணர்வு ஏற்படக்கூடிய அறிகுறிகள் தோன்றவுள்ள இந்த நிலையிலேயே - இந்தப் படுகொலைகள் இரு சாராருக்கும் விரிசல்களை ஏற்படுத்த வழி வகுக்கும்.

இந்தப் படுகொலையில் அரசாங்கம் மாற்றுக் குழுக்களைச் சம்பந்தப்படுத்தி - கண்டும் காணாததுபோல் இருக்கமுடியாது.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளின் பொறுமையைச் சோதிக்க முற்படுவது மீண்டும் யுத்தம் ஒன்றுக்கு வழிவகுப்பதாக அமையும் என்றும் குறிப்பிட்டார்.

# சுனாமி அனர்த்தம் குறித்த நாடாளுமன்ற தெரிவுக்குழு

## சபாநாயகரிடம் பிரேரிப்பு

சுனாமி அனர்த்தம் பற்றி பரிசீலனை செய்வதற்கான நாடாளுமனறத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டுமென்று பிரேரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பிரேரணை சகல அரசியற் கட்சிகளின் தலைவர்களால் கைச்சாத்திடப்பட்டு, சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டாரவிடம் கையளிக்கப்பட்டது.

அனர்த்த முன்னெச்சரிக்கை அமைப்பொன்றுக்கான வழிமுறை ஏதாவது இருந்ததா என்பது பற்றி இந்தக் குழு ஆராயும்.

முன்னெச்சரிக்கை அமைப்புத் தொடர்பாக தெரிவுக்குழு சிபார்சை வழங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்தத் தெரிவுக்குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் சபாநாயகரால் நியமிக்கப்படுவர் என்றும், இந்தக் குழுவில் 21 பேர் அங்கம் வகிக்கவேண்டுமென்றும் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# தகைமைகளைப் பூர்த்தி செய்த தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க அங்கீகாரம்

தகைமைகளைப் பூர்த்திசெய்த தொண்டர் ஆசிரியர்களை அரச சேவையில் நிரந்தரமாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி ஆசிரிய சேவைகளுக்கான அடிப்படைத் தகைமையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு கஷ்ட, மிகக் கஷ்டப் பிரதேசங்களில் 2004 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரை 3 ஆண்டுகள் சேவையாற்றியவர்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.


இதன்போது 18 வயது முதல் 45 வயதுக்கு உட்பட்ட தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தகைமைகளைப் பூர்த்தி செய்த தொண்டர் ஆசிரியர்களுக்கு மார்ச் மாதம் முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென்று, கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கடமை புரியும் அதே பாடசாலைகளில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# இராணுவம்-அரசுக்கு தெரியாமல் தாக்குதல் நடந்திருக்க முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் பெ.சந்திரசேகரன்



(கொழும்பு)

தமிழ் மக்களைப் பார்த்து 1983 ஆம் ஆண்டு ஜே.ஆர் - நாடாளுமன்றத்தில் போரா? சமாதானமா வேண்டும் என்று கேட்டார். ஆனால், இன்று தமிழ் மக்கள் போரா? சமாதானமா? என்று கேட்கவேண்டிய அளவுக்கு வந்துள்ளார்கள் என்று, மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோர் கொல்லப்பட்டது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர இருக்கிறோம்.

வெலிக்கந்தவில் ஏற்பட்ட இந்தத் தாக்குதல் உண்மையாக இரண்டு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட தாக்குதல் அல்ல. நிராயுதபாணியாக வந்த அரசியற்பொறுப்பாளரைத் திட்ட மிட்டுப் பழிவாங்கி இருக்கிறார்கள்.


அந்தப் பிரதேசத்தில் இரண்டு இராணுவ முகாம்கள் இருக்கின்றன.

எனவே, இது இராணுவத்துக்குத் தெரியாமல், அரசாங்கத்துக்குத் தெரியாமல் இந்தத் தாக்குதல் நடந்திருக்குமென்று சொல்லமுடியாது.

இது ஒரு திட்டமிட்ட சதியாகும். தற்போது விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மிக நிதானமாக, மிகப் பொறுமையாக செயற்பட்டு வருகின்றனர்.

இந்தக் கொலைச் சம்பவம் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒரு பின்னடைவைத் தோற்றுவித்துள்ளது.

# சலஞ்சர் கிரிக்கெட் போட்டி
# இந்திய சீனியர் அணி வெற்றி



சலஞ்சர் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் கங்கூலி தலைமையிலான இந்திய சீனியர் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் ஷேவாக் தலைமையிலான இந்திய பி அணியைத் தோற்கடித்தது.

இந்திய சீனியர் - இந்திய ஏ, பி அணிகள் இடையேயான சலஞ்சர் கோப்பை கிரிக்கெட் போட்டி மும்பையில் நடைபெற்றுவருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் கங்கூலி தலைமையிலான இந்திய சீனியர் அணியும், ஷேவாக் தலைமையிலான இந்திய பி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இந்திய பி அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 275 ரன் சேர்த்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதிகபட்சமாக லக்ஸ்மன் 67 ரன்னும், ஸ்ரீராம் 52 ரன்னும், ராயுடு 45 ரன்னும் எடுத்தனர். ஷேவாக் 9 ரன்னில் அவுட்டானார்.

சீனியர் அணி தரப்பில் பாலாஜி 4 விக்கெட்டுகளையும், போஸ், கங்கூலி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், கும்ளே 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

276 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய கங்கூலி அணி 46.4 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 278 ரன் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அதிகபட்சமாக



தொடக்க வீரர்களான தவான் 126 ரன்னும், டோனி 102 ரன்னும் எடுத்தனர். கங்கூலி 27 ரன் எடுத்து ஆட்டமிழந் தார்.

## அன் ரூ சைமன்ஸ் குணமடைந்து வருகிறார்



(மெல்போர்ன்)


அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை ஆட்டக்காரர் அன் ரூ சைமன்ஸ் காயம் குணமாகி உடல் நலம் தேறிவருகிறார்.

முத்தரப்புக் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இறுதிப்போட்டியின் போது அவுஸ்ரேலிய சகலதுறை ஆட்டக்காரர் அன் ரூ சைமன்ஸ் கணுக்காலில் காயமடைந்தார்.

இரண்டாவது இறுதிப்போட்டியில் அவர் பங்கேற்கவில்லை. தற்போது அவரின் காயம் குணமாகி வருகிறது. அவுஸ்ரேலிய அணி அடுத்த மாதம் நியூஸிலாந்துக்கு எதிராக ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகிறது.

இந்தத் தொடரில் சைமன்ஸ் இடம்பெறும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. அவரது காயம் விரைவாகக் குணமாகி வருகிறது. அணியில் சைமன்ஸ் இடம்பெறும் வாய்ப்புகள் அதிகம். ஆனாலும், அடுத்தவாரம் நடக்கும் மருத்துவ சோதனையில் அவர் தேறவேண்டும் என்கிறார் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி டொக்டர் டிரெவர் ஜேம்ஸ்.

## ஹைதராபாத் ஓபன் சானியா வெற்றி!



ஹைதராபாத் ஓபன் ரெனிஸ் - இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்சா எளிதான வெற்றிபெற்றார்.

நேற்றுமுன்தினம் பெண்கள் ஒற்றையர் முதல் சுற்றுப்போட்டிகள் நடந்தன. இதில் சானியா - ரொமேனியாவின் டெலியா செஸ்கிரியானுவை 6-2, 7-5 என்ற நேர் செட்களில் வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

அவுஸ்ரேலிய ஓபனில் அசத்திய 18 வயது சானியா அடுத்த மோதலில் சீனாவின் ஜியா செங்கைச் சந்திக்கவுள்ளார்.

## ஐ.சி.சி அணியுடனான போட்டியில் அவுஸ்ரேலிய அணியே மோதலாம்

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் வகிக்கும் அவுஸ்ரேலிய அணி - சூப்பர் சீரிஸ் தொடரில் உலக லெவன் அணியுடன் மோதும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தற்போது தர வரிசைப்பட்டியலை வெளியிட்டு வருகிறது. இந்தப் பட்டியலில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் முதலிடம் வகிக்கும் அணியோடு உலக லெவன் மோதும் சூப்பர் சீரிஸ் தொடர் ஒன்றை அடுத்த ஆண்டு முதல் தொடக்க உள்ளது.

இந்தத் தொடரில் 3 ஒரு நாள் ஒரு டெஸ்ட் போட்டி நடக்கவுள்ளது. தற்போதைய நிலையின்படி ஒரு நாள் தொடரில் அவுஸ்ரேலியா 137 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. நியூஸிலாந்து அணி 120 புள்ளிகளுடன் அடுத்த இடத்தில் உள்ளது. இந்த இரு அணிகளும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுள்ளன. இதில் அனைத்துப் போட்டிகளிலும் அவுஸ்ரேலியா தோற்றாலும் நியூஸிலாந்து தரவரிசையில் முன்னேற முடியாது.

ஒரு புள்ளி வித்தியாசத்தில் ஆசிய அணி முந்திவிடும். இதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. தரவரிசைப்பட்டியலுக்கான காலக்கெடு எதிர்வரும் ஏப்ரல் 1. 2005 வரை நீடிக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அவுஸ்ரேலியாவை முந்த, மற்ற அணிகளுக்கு வாய்ப்பில்லை என ஐ.சி.சி அடித்துக் கூறுகிறது. மெல்போர்னில் 2005 ஒக்டோபரில் கிடைக்கும் சூப்பர் சீரிஸ் தொடரில் இந்த அணியை எதிர்த்தே உலக லெவன் மோதும் என மறைமுகமாக தனது கருத்தையும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

## அகமதாபாத் போட்டிக்கு பாகிஸ்தான் சம்மதம்?

(இஸ்லாமாபாத்)

இந்திய சுற்றுப் பயணத்தின்போது அகமதாபாத் நகரில் டெஸ்ட் போட்டியில் விளையாட பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மறுத்துவிட்டது. இது பெரிய குழப்பங்களை ஏற்படுத்தியது. பாகிஸ்தான் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய கிரிக்கெட் சபை பிரதிநிதிகள் பலர் பாகிஸ்தான் சென்றனர்.

இந்திய கிரிக்கெட் துணைத் தலைவர் ராஜிவ் கலா பாகிஸ்தான் கிரிக்கெட் தலைவர் ஷகாரியார் கான், பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தாரிக் அஜீஸ் ஆகியோரிடம் பேச்சு நடத்தினர்.

பின்னர் ராஜீவ் கலா அளித்த பேட்டியில் - பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்தது. அகமதாபாத் நகரில் விளையாட பாகிஸ்தான் சம்மதம் தெரிவிக்கும் என நம்புகிறேன். இந்த விடயம் பற்றி முஷாரப்பிடமும் பேசப்படும் என்றார்.

## பாகிஸ்தானுடனான தொடரில் சச்சின் விளையாடலாம்!

### பயிற்சியாளர் ஜோன் ரைட்

(புதுடெல்கி)

முழங்கை வலியால் அவதிப்பட்டுவரும் சச்சின் டெண்டுல்கர் அடுத்த மாதம் நடைபெறும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் பங்கேற்கலாம் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட்.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் கடந்த மாதம்வரை அவர் விளையாடமுடியாத சூழ்நிலையே இருந்தது. ஆனால், தற்போது அவர் விளையாடுவார் எனத் தெரிகிறது.

அதற்காக அவர் உடற்பயிற்சியைத் தொடங்கியுள்ளதாக கடந்த திங்கட்கிழமை அவருடன் பேசிய போது தெரிவித்தார். அவர் அணியில் விளையாடுவதை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம் என்றார் ரைட்.

இதற்கிடையே எதிர்வரும் 22 ஆம் திகதி துலிப் கோப்பை போட்டியில் அவர் விளையாடத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

**விளையாட்டு**

## பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் நீக்கப்படுவாரா?



அவுஸ்ரேலியாவுக்கு எதிராக ஏற்பட்ட தோல்வியினால் பாகிஸ்தான் அணியின் கப்டன் பதவியில் இருந்து இன்சமாம் நீக்கப்படுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடவுள்ளது.

இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் அணி தேர்வு செய்யப்படவுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணி அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் தோல்வியைச் சந்தித்துள்ளதால் கப்டன் பதவியில் இருந்து இன்சமாம் நீக்கப்படுவாரா? என்ற சர்ச்சை கிளம்பியுள்ளது.

பாகிஸ்தானின் தொடர் தோல்வி காரணமாக கப்டன் பதவியில் இருந்து இன்சமாம் நீக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. முன்னாள் கப்டன் இம்ரான் கான், முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சர்பிராஸ் ஆகியோர் இன்சமாமை கப்டன் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்று கூறியுள்ளனர்.

இக்கட்டான சூழ்நிலையில் கப்டன் பதவியில் இருந்து இன்சமாமை நீக்கினால் பாகிஸ்தான் அணி மேலும் பலவீனம் அடைய வாய்ப்புள்ளது என அந்த நாட்டு கிரிக்கெட் சபை கருதுகிறது.

எது எப்படியோ இன்சமாம் கப்டன் பணியை தொடருவதும் தொடராமல் போவதும் எதிர்வரும் 18 ஆம் திகதி முடிவுகள் தெரியும். அப்படி ஒரு வேளை இன்சமாம் நீக்கப்பட்டால் - யுனுஸ் கான் அல்லது யுகானாவுக்கு கப்டன் பதவி கிடைக்க வாய்ப்புண்டு.



சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக இலங்கை வந்த அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன் - இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுடன் இணைந்து சுனாமியால் சேதமடைந்த காலி மைதானத்தைப் பார்வையிடுவதனைக் காணலாம்.

# அபிவிருத்தித் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி அழிந்த பிரதேசங்களை கட்டியெழுப்பவேண்டும்

## அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**மீன்பிடித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து மக்கள் வாழ்க்கையை உயர்த்தவேண்டும். பாதிப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நிதி பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆகவே தேவைகளை முன்னுரிமைப்படுத்தி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவேண்டுமென யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சுனாமி அனர்த்த கடற்தொழில் குழுக் கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.**

இந்தக் கூட்டத்துக்கு தலைமை வகித்த அரச அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களுக்கான உடனடி நிவாரணம், உலர் உணவு வழங்கும் நடவடிக்கைகள் முற்றுப் பெற்றுள்ளன.

இரண்டாம் கட்டமாக இடைத் தங்கல் முகாம்களை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன.

மூன்றாவது கட்டமாகீ அந்த மக்களுக்குரிய நிரந்தர வாழ்விடங்களை அமைக்கும் வேலைகள் மற்றும் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு தும்பு கண்ணாடியிழைப் படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள், வலைகள் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். கடற்தொழில் உபகரணங்கள் வழங்கும்போது அங்கத்தவர்களின் உயிரிழப்புக்கள், பாதிப்புக்கள், ஏற்பட்ட இழப்புக்களின் தொகை ஆகியவற்றின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தி கடற்தொழில் உபகரணங்களை வழங்கவேண்டும்.

இந்தப் பணியை அனைத்து சங்கங்கள், சமாசங்களையும் ஒருங்கிணைத்து, தகவல்களைப் பெற்று வழங்குவதற்குரிய நடவடிக்கையை யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனம் மேற்கொள்ளவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

யாழ். மாவட்டத்தில் உடனடியாக செய்யப்படவேண்டிய வேலைத் திட்டங்களை கடற்தொழில் நீரியல் வள அமைச்சு உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் முன்மொழிந்தார்.

☆படிவங்கள் மூலம், சேதமாக்கப்பட்ட படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள், வலைகள் ஆகியவற்றின் இழப்பீடுகளைத் தயாரித்தல்.

☆உடனடித் தேவையாகவுள்ள தும்பு கண்ணாடி படகுகள், மூன்றரை தொன் படகுகள் பெற 2 ஆயிரத்து 752 மில்லியன் ரூபாவும், உட்கட்டுமானப் பணிகளுக்காக (முன்பள்ளிகள், சந்தைக் கட்டடங்கள், சனசமூக நிலையங்கள்) 353 லட்சம் ரூபா நிதி ஒதுக்க கடற்தொழில் நீரியல் வள அமைச்சிடம் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த.

☆பருத்தித்துறை முனை தொடக்கம் தொண்டமானாறு வரை கரையிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் கடலினுள் முருகைக் கற்களாலான அணை அமைத்தல். அத்துடன் கரைக்கு அண்மையில் தடுப்புச் சுவர் அமைத்தல். இதற்கு திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் ஆலோசனை பெறுதல்.

☆ஒவ்வொரு கிராமத்திலும் நங்கூரம் அமைக்கும் நிலையங்களை அமைப்பதற்கு திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்து அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கையளித்தல்.

☆தொண்டமானாறு, பருத்தித்துறை, முனை ஆகிய இடங்களில் சகல வசதிகளும் கொண்ட இரண்டு துறை முகங்கள் அமைத்தல்.

☆மணற்காடு கிராமத்தை புனர்நிர்மாணம் செய்தல். முதற்கட்டமாக இலங்கை - அமெரிக்க மகளிர் அமைப்பு 40 வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது. இன்னமும் 175 வீடுகளை அமைத்துத் தரும்படி அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்தல்.

☆கியூமெடிக்கா நிறுவனம் 14 படகுகளை வழங்கியுள்ளது. இன்னமும் ஆயிரம் படகுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

☆கடற்தொழில் திணைக்களம் முதற்கட்டமாக 10 படகுகளை வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தப் படகுகளை பயனாளிகளைத் தெரிவுசெய்து வழங்குதல்.

☆சகல வசதிகளும் கொண்ட வீடமைப்புத் திட்டம் மற்றும் மின்சாரம் மணற்காடு கிராமத்துக்கு வழங்க நகர நிர்மாண அமைச்சின் உதவியைப் பெறுதல் ஆகிய திட்டங்களை முன்மொழிந்தார்.

இந்தக் கூட்டத்தில் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள், விடுதலைப் புலி உறுப்பினர்கள், கடற்தொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை சேர்ந்த சமாசங்களின் பிரதிநிதிகள், திட்டமிடல் பணிப்பாளர் வீ.சாம்பசிவம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (21)

## திருடப்பட்ட ஓட்டோ நாயன்மார்கட்டில் மீட்பு



திருநெல்வேலியிலுள்ள காஞ்சிகாமகோடி பீடத்துக்குச் சொந்தமான ஓட்டோ ஒன்று கடந்த திங்கட்கிழமை இரவு திருடப்பட்டது. திருடப்பட்ட இந்த ஓட்டோ நேற்றுமுன்திம் காலை நாயன்மார்கட்டு குளத்தடியை அண்டியுள்ள வளவு ஒன்றில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

ஓட்டோவில் இருந்த முக்கிய உதிரிப்பாகங்கள் யாவும் திருடர்களால் கழற்றிச் செல்லப்பட்டது. இதுபற்றி பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (55)

## வீதியோர குப்பைகளால் போக்குவரத்து சிரமம்!



நாயன்மார்கட்டு குளத்தடியை அண்டியுள்ள பகுதியில் கோயிலுக்கு முன்பாகவுள்ள வீதியின் இரு மருங்குகளிலும் பெரும் குவியல்களாகக் கொட்டப்படும் குப்பைகளாலும், கழிவுப் பொருட்களாலும் அந்தப் பகுதி பெரும் துர்நாற்றம் வீசுவதுடன், வீதிப் போக்குவரத்துக்கும் பெரும் இடையூறாக இருப்பதாகவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (55)

## தாலிக்கொடி அறுத்த திருடன் மடக்கிப்பிடிப்பு

பருத்தித்துறை வீதியால் யாழ். நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பெண்மணியிடமிருந்து நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு தப்பியோடிய வேளை, அந்தப் பகுதியில் நின்ற இளைஞர்களால் துரத்திச் செல்லப்பட்டு அவர்களில் ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் சேர்த்துப் பிடிக்கப்பட்டார். மற்றவர் தலைக்கவசத்துடன் தப்பியோடிவிட்டார்.

நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த பிடிபட்ட நபரும், அவருடைய மோட்டார் சைக்கிளும் நல்லூர் கோட்ட அரசியற்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

அத்துடன் அறுத்துச் செல்லப்பட்ட தாலிக்கொடியும் அரசியற்துறை அலுவலகத்தில் வைத்து உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.(55)

## கடலுணவுகளை ஏற்றுமதிசெய்ய வாகனங்கள் வழங்க கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

சுனாமி அனர்த்தத்தின் போது வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்துக்குச் சொந்தமான பாரவூர்தி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் சமாசத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட கூலர் வாகனம் இரண்டும் சேதமடைந்தன.

இதனால் கடலுணவுப் பொருட்கள் ஏற்றுமதியில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

ஆகவே, சமாச கடல் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவியாக புதியதொரு கூலர் வாகனத்தைத் தந்துதவும்படி - தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளரிடம் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கேட்டுள்ளது. (21)

## மாமுனை - சுண்டிக்குளம் வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபைக்குட்பட்ட மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான வீதிகளைத் திருத்துவதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலக பொறுப்பாளர் பொ.தங்கராசா ஆகியோர் வீதிகளைப் பார்வையிட்டு நீளத்தை அளவிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்கரையோர வீதிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

பொதுமக்களின் தேவை கருதி இநத வீதிகளை முன்னுரிமை அடிபபடையில் திருத்தம் செய்வதற்குரிய வேலைகள் நடைபெறலாமென பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (21)

## பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை

வலிகாமம் வலயத்திலுள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் மாணவர்களை தரம் 1 இல் சேர்க்கும் போது சேகரிக்கப்பட்ட பெருமளவு நன்கொடைப் பணத்துக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படாத சம்பவம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு முரணான வகையில் சேகரிக்கப்பட்ட பல லட்ச ரூபாவுக்கே பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை. அண்மையில் இடம்பெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட் டத்தில் கணக்கறிக்கையைக் கோரிய போதே நன்கொடைப் பணத்துக்கு பற்றுச்சீட்டு வழங்காதது தெரிய வந்ததாக அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (111)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : க.ஆகாஷ்
முகவரி : சங்கானை.

### அகவை மூன்று



பெயர் : இ.ஹரிமனோகர்
முகவரி : கனடா.

### அகவை நான்கு



பெயர் : ஜெ.சஜீபன்
முகவரி : வவுனியா.

### அகவை நான்கு



பெயர் : மோ.மதுர்சனா
முகவரி : சுன்னாகம்.

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ----------------

முகவரி ----------------

----------------

பிறந்த ஆண்டு: ----------------

கூப்பன்கள் பதிதும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------

பெற்றோர் ஒப்பம்




பனை மரத்தின் விதையை நிலத்தில் அரை அடி ஆழத்தில் விதைப்பதன் மூலம், பனங்கன்று ஒன்றை வளர்த்தெடுக்க முடியும்.


# பனையின் அமைப்பு

வளர்ந்த பனையில் பொதுவாக பூச்சித்தாக்கம் ஏற்படமாட்டாது. ஆனால், பனம் விதை நடுகையின் போது மட்டும் அதன் முளையை பங்கஸ் தாக்குகிறது. இதனால் தான் பனம் விதையின் முளைதிறன் 50 - 60 வீதம் வரையுமேயுள்ளது.

பனம் விதையின் முளைதிறனைக் கூட்டுவதற்குப் பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டு பார்த்தபோது, பனங்களி எடுக்கப்பட்ட பனம்விதை நன்கு முளைப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பனங்களியை மாடு உண்ணும்போது, அதை நன்றாகச் சூப்பிச் சாப்பிடுகிறது. மாடு சூப்பிய பனங்கொட்டை 80 - 90 வீத முளைதிறன் கொண்டதாகவுள்ளது. இதன் விஞ்ஞான ரீதியான உண்மையை நோக்குவோமானால், பனம் பழம் தொடர்ச்சியாகப் பல நாட்களுக்குக் குவியலாக ஒன்றன் மேல் ஒன்றாக வெளியிலே இருக்கும் பட்சத்தில், ஈரத் தன்மையால் பங்கசுத் தாக்கம் ஏற்படுகிறது. ஆனால் பனங்களி எடுக்கப்பட்ட அல்லது மாடு சூப்பிய கொட்டையின் மேல், களித்தன்மை எதுவும் இல்லாததனால் பங்கசுத் தாக்கம் ஏற்படுவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை.

அத்தோடு, பனம் பழம் விழுந்து ஒருமாத கால எல்லைக்குள் பனம் பாத்தியைப் போட்டால், அதன் முளைதிறன் 70 - 80 வீதமாக இருக்கும். நீண்ட நாட்களுக்கு வைத்திராமல் விதைக்கப்படுவதனாலேயே பங்கசுத் தாக்கத்திலிருந்து அவை தப்புகின்றன. பனங்கொட்டையைப் பாதுகாக்க, அதன்மேல் பங்கசு கொல்லியை விசிற வேண்டும். இதன்மூலம் பங்கசுத் தாக்கத்தைத் தவிர்க்கமுடியும்.

பனம் விதையில் இருந்து, முளை வளர்ந்து 4 மாதங்களின் பின் அதன் கீழ் கிழங்கு உருவாகி, கிழங்கிலிருந்து பீலி எனப்படும் முதல் இலை 6 - 7 மாதங்களின் பின் நிலத்திலிருந்து வெளியே பச்சை நிறக் குருத்தாக வரும். இந்தப் பீலி வருவதற்கு அதிகளவில் நீர் தேவையில்லை. இந்த விதையில் இருந்து ஏற்படும் முளையை நோக்கும் போது, இது




ஏனைய விதைகள் முளைக்கும் விதத்திலிருந்து மாறுபட்டிருப்பதை அவதானிக்கலாம்.

ஏனைய விதைகளை நாம் நடுகை செய்தால், அதன் விதையில் இருந்து வெளிவரும் வேர் நிலத்தின் கீழ் நோக்கியும், முளை மேல்நோக்கியும் வளரும். தென்னையில்கூட தேங்காயில் இருந்து முளை நேரடியாகவே மேல் கிளம்பிவர, வேர் கீழ் நோக்கிச் செல்கின்றன. (தொடரும்...)

நன்றி
பனையியல் -
முருகேசு பாக்கியநாதன்

# ஆடு வளர்ப்பு

கிராமப்புற மக்களில் பெரும் பாலானோர், ஆடுவளர்ப்பில் ஈடுபடுகிறார்கள். கிராமப் பகுதியில் ஆடு வளர்ப்புகுரிய சாதக சூழ்நிலை காணப்படுவதாலேயே ஆடு வளர்ப்பு முக்கிய இடம் வகிக்கிறது.

ஆடு வளர்ப்புக்குரிய சாதகமான காரணிகள் வருமாறு:-

1. சீரான காலநிலை இருத்தல் வேண்டும்.
2. மேய்ச்சல் நிலங்கள் இருத்தல் வேண்டும்.
3. நன்னீர் வசதியிருத்தல் வேண்டும்.
4. புல் நிலங்கள் இல்லாத பட்சத்தில், இலை குழைகளைப் பெற்றுக் கொள்ளும் வசதிவேண்டும்.



ஆடு வளர்ப்பால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளாகப் பின்வருவனவற்றைக் கூறமுடியும்.

1. பாலைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. இறைச்சியைப் பெறலாம்.
3. தோலைப் பெற்றுக் கொள்ள முடியும்.
4. பசளைகளைப் பெறலாம்.

ஆடுகள் மிக விருப்பமாக கிளிசிறியா பாலுள்ள இலைகள் – இப்பிலிப்பி, பலா இலை, முருக்கமிலை போன்றவற்றை உண்ணும்.

மன்னார், சிலாபம், அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களில் ஆடுவளர்ப்பு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

– மட்டுவிலூர் தி.சாரங்கன்.

# விளை நிலங்களில் ஏற்பட்ட சுனாமி பாதிப்பும் – தீர்வும்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

**நடுத்தரத் திட்டம் -**

இந்தத் திட்டத்தின் கீழ் மண்ணில் உப்புத் தன்மையைக் குறைத்துக் கொள்ளக்கூடியதான செயற்பாடுகள் தொடர்பாக, விவசாயிகளுக்கு பயிற்சி ஒன்றை வழங்குதல் வேண்டும். அத்துடன் மண்ணிலுள்ள உப்புத்தன்மையை அடிக்கடி பரிசோதித்து, உப்பின் தன்மை குறைந்துள்ளதா எனக் கண்டறிய வேண்டும். மேலும் மண்ணின் உப்புத் தன்மை படிப்படியாகக் குறையும்வரை அதனைத் தாங்கக் கூடிய நெல்வகையைப் பயிரிட வேண்டியிருக்கும்.

**நீண்ட காலத் திட்டம் -**

நீர் ஓடும் வாய்க்கால்கள் செப்பனிடப்பட வேண்டும். பெரும் போகத்தின்ஆரம்பத்தில் கிடைக்கும் மழையைப் பயன்படுத்தி, உப்புத் தன்மையை நீக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். வயல்களில் நீரைத் தேக்கி வைத்து சில நாட்களின் பின் அந்த நீரை வெளியேற்றுவதன் மூலம் உப்புத் தன் மையை அகற்றிவிடலாம்.

ஏனைய காணிகளிலுள்ள உப்புத் தன்மையையும் நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கிணறுகளில் கடல் நீர் சேர்ந்ததால் ஏற்பட்ட உப்பையும், கிணற்றைச் சுத்தப்படுத்துவதனூடாக உப்பு மண்ணுடன் சேருவதைத் தவிர்க்கலாம். மேலும் பள்ளங்களில் தேங்கி நிற்கும் கடல் நீரையும் வெளியேற்ற வேண்டும்.

இந்தத் திட்டங்களை மக்களுடன் கலந்துரையாட வேண்டும். முக்கியமாக வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுவதற்குத் தேவையான விதைகளை வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவேண்டும்.

உதவுபவர்களும், உதவி பெறுபவர்களும் பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்வது நன்மையளிக்கும்.

☆ சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பு விவசாயிகளின் பிரச்சினை அல்ல. சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேசங்களுக்குமான பிரச்சினை.

☆ வயல் காணிகளில் உப்புத் தன்மை அதிகமாகக் காணப்படுவதால், புனரமைப்புப் பணிகளில் வயல்காணிகளுக்கு முதலிடம் வழங்க வேண்டும்.

☆ சுனாமி பாதிப்புக்குள்ளான பிரதேசங்களை வரைபடமாக்குவது முக் கியம். இது புனரமைப்புப் பணிகளுக்கு தேவையான தகவல்களைப் பெற உதவும்.

☆ மண் தொடர்பான ஆய்வாளர்கள், நீர் விநியோக மற்றும் நீர் வழங்கல் பொறியியலாளர்கள் உத்தேசத் திட்டத்தின் சேவையாளர்களின் உதவிகளைப் பெறல் வேண்டும்.


☆ பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படல் வேண்டும்.

சசி . சந்திரகாசன்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 60/= | 70/= | 80/= | 70/= | 50/= | 80/= | 70/= |
| வெண்டிக்காய் | 40/= | 30/= | 40/= | 30/= | 25/= | 40/= | 30/= | 50/= |
| உருளைக்கிழங்கு | 50/= | 60/= | 60/= | 55/= | 50/= | 50/= | 80/= | 70/= |
| கத்தரிக்காய் | 80/= | 70/= | 80/= | 70/= | 70/= | 60/= | 90/= | 90/= |
| பாகற்காய் | 40/= | 60/= | 70/= | 50/= | 50/= | 50/= | 80/= | 60/= |
| கரட் | 70/= | 60/= | 60/= | 70/= | 65/= | 80/= | 80/= | 50/= |
| பீற்றூட் | 30/= | 30/= | 40/= | 30/= | 40/= | 40/= | 40/= | 30/= |
| முருங்கைக்காய் | - | - | - | - | - | 250/= | - | - |
| வெங்காயம் | 25/= | 25/= | 30/= | 25/= | 25/= | 30/= | 40/= | 30/= |
| பச்சை மிளகாய் | 60/= | 70/= | 80/= | 100/= | 65/= | 80/= | 80/= | 80/= |

## கணினியுடன் இணைப்பில்லாத புதிய மொபைல் பிரிண்டர்



வழமையில் நாங்கள் பிறிண்ட் எடுக்கும்போது, கணினிக்கும், பிறிண்டருக்கும் இடையில், இணைப்புக் கம்பிகள் பயன்படுத்துவதே இயல்பு. இத்தகைய இயல்பு களைக் கொண்ட பிரிண்டர்களே, டொட் மற்றிக்ஸ் (Dotmatrix), இங்ஜெற் (Inkjet) அல்லது (Bubblejet), லேசர் (Laser) என்பனவாகும். ஆனால் இந்த வகை மொபைல் பிரிண்டர் (Mobile Printer) கள் இணைப்புக் கம்பிகளைப் பயன்படுத்தாமல் பிரதிகளைப் பெறலாம்.

Hewlett - Packard நிறுவனத்தால் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட "HP Deskjet 450 bi" என்ற புதியவகைத் தொழில்நுட்பத்தைக் கொண்ட பிறிண்டர்களே இவையாகும். இது ஒரு Mobile Printer களின் புதிய வடிவாகும்.

இந்தப் பிறிண்டர்களை Ms windows Mac, Palmos windwsce, Pocket PC போன்ற ஒப்பரேட்டிங் சிஸ்ரங்களில் பயன்படுத்தலாம். மேலும் உங்கள் தேவைக்கும், வசதிக்கும் ஏற்றவகையில் இந்தப் பிறிண்டருடன் Usbcable, Parallel Cable, அதிவேக Infrared இணைப்புகள், Compac Flash வகையிலான Memory Card கள் அல்லது CF Bluetooth Card கள் போன்றவற்றை இணைத்துப் பயன்படுத்தலாம்.

இந்தப் பிறிண்டருடன் இணைக்கப்பட்டுள்ள மின்கலத்தின் மொத்த நிறை 4.6 Pounds ஆகும். ஒரு தடவை இதில் காணப்படும் மின்கலத்தை மின்னேற்றிக் கொண்டால், சுமார் 350 பக்கங்களைப் பிரதி செய்து கொள்ளலாம். கறுப்பு, வெள்ளையிலான பிரதிகளை அதிகபட்சமாக 1200x1200 Resolution பெறலாம். புகைபபட (Photo) தாழில் வர்ணப் பிரதிகளை 4800x1200 Resolution பெற்றுக் கொள்ளலாம்.

கறுப்பு வெள்ளையாயின், ஒவ்வொரு காட்ரிஜ்களும் 450 பக்கங்களிலும், கலர் ஆயின் 400 பக்கங்களிலும் பிரதி செய்து கொள்ளலாம். இவை ஒரு நிமிடத்தில் எட்டு அல்லது ஒன்பது பக்கங்களைப் பிரதி எடுக்கின்றன. (PPm - Pages Per Minute, Colour Print - 8 PPm)

இந்தப் பிறிண்டர்கள் அடக்கமான அளவிலும், சிறப்பான வேகம் மற்றும் உயர்தரப் பிரதிகளைத் தரக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, வெளியிடங்களுக்குச் செல்லும்போது, சுலபமாக காவிச் செல்லக் கூடிய தன்மையையும் கொண்டுள்ளது.

மேலும் தேவைப்படுமிடத்தில் கணினிகளுடன் இணைப்பைக் கொடுத்தும் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த வகைப் பிறின்டர்களை எந்த வகைச் சூழ்நிலைகளுக்கும், அதன் தேவைக்கும் ஏற்றவகையில் பயன்படுத்த கூடியதாக இருத்தல் சிறப்பானதொரு அம்சமாகும். இதனால் HP Deskjet 450 cbi பிறின்டரானது - பிரிண்டர்களின் உற்பத்தியில் சிறப்பானதொரு வடிவம் என்பதை மறுக்க இயலாதது ஆகும்.

இதன் பெறுமதி இலங்கை ரூபாப்படி சுமார் ரூபா 35000 ரூபா. இதற்குப் பயன்படுத்தும் இங்க்றிஜ் (Ink Cartrige) களல் கறுப்பு, வெள்ளையின் பெறுமதி ரூபா 2000 ரூபாவும், போட்டோக் கலர் வர்ணம் ரூபா 2500 ரூபாவும், வர்ணம் 3500ரூபா வாகச் சந்தையில் விலை போகின்றன.

நீங்களும் சிறந்த தரமான, விரைவான பிரதிகளைப் பெற, மொபைல் பிறின்டர்களைக் கொள்வனவு செய்து, தகவல் தொழில் நுட்ப உலகின் புதிய தொழில் நுட்பத்துக்குள் உங்களையும் உள்வாங்கிக் கொள்ளுங்கள்.

- எஸ். ஜெயா -

## தொழில்மலர்

# வணிக உத்திகள் மூலம் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்

ஒரு தொழில் தொடங்குவதற்கு முன்னர், திட்டம் தீட்டப்பட்டு, அந்தத் திட்டத்தில் நிறுவனத்தின் வளங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. திட்டத்தைச் செயற்படுத்தும்போது, சூழ்நிலைகளில் மாற்றம் நேரலாம். உதாரணமாக- பொருளாதார, சமூக, அரசியல், தொழில்நுட்ப மாற்றங்கள் திட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஆகவே திட்டத்தைச் சூழ்நிலைக்கேற்ப சீர்படுத்தவேண்டி ஏற்படலாம். புதிய சூழ்நிலைக்கேற்ப ஒரு நிறுவனம் தேவைப்படும் நடவடிக்கைகளை எடுத்தால்தான், அரிய வளங்களை வீணாக்காமல் காப்பாற்ற முடியும்.

வணிகச் சூழ்நிலையில் போட்டி தவிர்க்கமுடியாதது. போட்டியாளர்கள் எடுக்கும் நடவடிக்கை மற்றைய நிறுவனங்களின் சந்தை, விற்பனை

**வணிகச் சூழ்நிலையில் போட்டி தவிர்க்க முடியாதது. எனவே ஒவ்வொரு நிறுவனமும் தன் விற்பனையைப் பாதுகாக்கவும், வளங்களைப் பாதுகாக்கவும் எதிர்நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியுள்ளது.**

ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே போட்டிச் சூழ்நிலையில் ஒவ்வொரு நிறுவனமும் தன் விற்பனையைப் பாதுகாக்கவும், வளங்களைப் பாதுகாக்கவும் எதிர்நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இவ்வாறு தொழிலின் சூழ்நிலைக்கேற்ப, ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் திட்டச் சீரமைப்பும், எதிர் நடவடிக்கைகளும் வணிக உத்திகள் எனப்படும். பொதுச் சந்தையில், சந்தை நிலவரம், ஒரு நிறுவனம் தன் பொருள்களுக்குச் சந்தையில் வகித்துவரும் சந்தைப் பங்கில் மாற்றம் ஏற்படும்போது இவற்றுக்கேற்ப உற்பத்திப் பொருள்களை வடிவமைக்க வேண்டியுள்ளது. சந்தை வழிமுறையை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல பொருள்களின் வடிவமைப்பில் மாற்றங்களைக் காண்கிறோம். அவற்றின், நிறம், அளவு, வடிவம், மூலப்பொருள், உறைவிலை ஆகியவற்றில் எல்லாம் மாற்றங்கள் ஏற்படுகின்றன. நாமும் அவற்றைப் பார்க்கிறோம். பல்மினுக்கும் பிரஸ்களில்கூட எத்தனை வடிவங்கள், வகைகள் வந்துவிட்டன.

ஆவியில் சமையல் செய்வதற்கான பாத்திரங்கள் முன்பு, பாரம் கூடியனவாகவும், அழுத்தமானவையாகவும், நீராவி அழுத்தத்தால், வெடிக்காமல் இருப்பதற்குரிய பாதுகாப்புடனும் இருந்தன.

ஆனால் தொழில்நுட்ப ஆராய்ச்சியின் பயனாக, இந்த வடிவமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. எடை குறைவான பாத்திரங்கள், அத்துடன் ஆவி அழுத்தம் அதிகமானால், இறப்பர் வளையத்தை வெளியே தள்ளி ஆவி வெளியேறுவதற்கு வசதியாக வடிவமைக்கப்பட்டன.

இத்தகைய மாற்றங்கள் எல்லாம், வணிக உத்தியால் விளைந்த மாற்றங்கள்தான். இதனால் மூலப்பொருள் மிச்சப்படுத்தப்படுகிறது. ஆகவே தொழில்நுட்ப மாற்றத்தால் வடிவமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, மூலப்பொருள் மிச்சப்படுத்தப்படுகிறது. இவ்வாறான உத்திகள் நிறுவனத்துக்கு நன்மை பயக்கும்.

சில சூழ்நிலைகளில் போட்டியைத் தவிர்க்க இரு நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து சந்தையைத் தக்கவைத்துக் கொள்வதும் உண்டு. இதேபோன்று, நட்டத்தில் இயங்கும் ஒரு நிறுவனத்தை இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனம் தன்னுடன் இணைத்துக்கொள்வதும் உண்டு. இதனால் நட்டத்தில் இயங்கும் நிறுவனத்தின் பயன்படுத்தப்படாத வளங்கள், சீரமைக்கப்பட்டு உற்பத்தித்திறன் உயர்த்தப்படும்.

ஒரு புதிய உற்பத்திப் பொருளை அறிமுகம் செய்வதற்கு அந்த நிறுவனம் தன்னுடைய செல்வாக்குமிக்க உற்பத்திப் பொருளுடன் இணைந்து, குறைந்த விலைக்கோ, இலவசமாகவோ வாடிக்கையாளருக்கு வழங்குவதுண்டு.

கையிலுள்ள விநியோக அமைப்பே புதிய உற்பத்திப் பொருளுக்கும் பயன்படுவதால், அதனுடைய பழைய வாடிக்கையாளர்களுக்குப் புதிய பொருளும் போய்ச்சேருகிறது. இதேபோன்று புதிய நிறுவனம் ஒன்று, பழைய நிறுவனத்தின் விநியோக அமைப்பைப் பயன்படுத்திக்கொள்வதும் உண்டு. இதனால் புதிய நிறுவனம் ஒன்று, புதிய விநியோக அமைப்பை உருவாக்குவதற்குத் தேவைப்படும் காலம் மிச்சப்படுத்தப்படுகிறது.

வணிக உத்திகள் செயற்படுத்தப்படவில்லையெனில் நிறுவனத்தின் கீழ் நிலையிலுள்ள பணி



யாளர்களுக்கு வழிகாட்டுதல் இராது. சந்தையில் காலம் மிகவும் பொன்னானது. காலத்தை இழந்தால் சந்தையை இழக்கநேரும்.

சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் உற்பத்திப் பொருட்களின் தரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு என்று உணவுப் பொருட்களை வழங்கிக் கொண்டிருந்த உணவு விடுதிகள், இப்போதெல்லாம் எப்போதும், சிற்றுண்டிகள், விரைவு உணவு என்று புதிய முறையைக் கொண்டுவந்துள்ளன. பரபரப்பான சூழ்நிலைக்கேற்ப பரபரப்பான உணவு முறையும் தோன்றிவிட்டது.

திட்டங்கள் நெகிழ்வுத் தன்மையுடன் இருந்தால்தான், இவ்வாறான உத்திகளைக் கையாண்டு, சூழ்நிலைக்கேற்ப செயல்முறையில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும். இத்தகைய மாற்றங்கள், வாய்ப்புக்களைக் கண்டறிந்தவுடனேயே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள உதவுகின்றன. (தொடரும்)

# இலத்திரனியல் வணிகமும், பொருளாதார விளைவுகளும்

(சென்வரத் தொடர்ச்சி...)

இவ்வாறுவேகமான பரிமாற்றம் பொருளாதார ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதாவது - தொடர்பாடல் தீர்ப்பனவு நடவடிக்கை வேகமாகக் காணப்படுவதால், உற்பத்தி விநியோகம் சந்தைப்படுத்தலை வேகமாக்க வேண்டி ஏற்படுகிறது. இது பொருளாதார மறுசீரமைப்புக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

இதன் மூலம் அதிக வினைத்திறனை ஊழியர் இயந்திரங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடிவதுடன், பொருளின் தரத்தையும் மேம்படுத்திக்ொள்ள முடிகிறது.

இணையத்தை மையமாகக் கொண்டு, இலத்திரனியல் வணிகம் காணப்படுவதால், அதனுடன் தொடர்புடைய கணினி, தொடர்பாடல், இயக்குநர், பொருத்தமான இடம் என்பவற்றுக்கான கேள்வி அதிகரிக்கிறது. இதனுடனும் பொருளாதார முன்னேற்றம் காண வாய்ப்பாக அமைகிறது.

உதாரணமாக -

ஐரோப்பிய ஒன்றியப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை 1993 ஆம் ஆண்டுக்கும், 2008 ஆம் ஆண்டுக்கும் இடையே மொத்த தேசிய உற்பத்தியில் 3-7 வீத வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பானைப் பொறுத்தவரை 2010 ஆம் ஆண்டில் 2.5% மாக மொத்த தேசிய உற்பத்தியில் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் பொருளாதார அமைப்பைப் பொறுத்தவரை, இது அதிகமாக உபயோகத்துக்கு உட்படுத்தாத முறையாகவே காணப்படுகிறது. ஏனெனில், செயற்பாட்டு மாற்றமானது - அரச துறையிலும் ஏற்படவேண்டியுள்ளதால் இதனை அரசு மாற்றி அமைக்கும் போதே, பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஆனால், நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தம் காரணமாகப் பெருமளவு நிதி அதற்குள் முடக்கப்பட்டது.

இதனால் பொருளாதார மறுசீரமைப்பு இலத்திரனியல் வணிகத்துக்கு ஒரு கனவாகவே காணப்பட்டது என்கின்றனர் பொருளியலாளர்கள்.

இருந்தபோதும், 1995 ஆம் ஆண்டு மே மாதத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக உணவு அமைச்சின் கீழ் இலங்கை ஏற்றுமதி சபையில் நிறுவப்பட்டுள்ள கணினி மயப்படுத்தப்பட்ட வர்த்தக தகவல் வலையமைப்பு (Trade net srilanka) சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. 1999 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட லைபர் ட்றேடர் ட்றேட் நெட் ஸ்ரீலங்கா இவைகளைத் தொடர்ந்து பல துறைகளும் இலத்திரனியல் வணிகத்துக்கு மாறுகிறது என்பதே துறைசார்ந்தோரால் எடுத்துக் கூறப்பட்டுவருகிறது. *

உ.பிரசன்னா

# வெலிக்கந்த தாக்குதல் சம்பவத்துக்கு வெகுசன அமைப்புக்கள் கண்டனம்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, போராளிகள் ஆகியோர் பொலனறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட கொடூரமான செயலை வன்மையாகக் கண்டிப்பதாக கிளிநொச்சி பொதுசன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரச பாதுகாப்பு பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தக் கொலைகளுக்கு அரச படைகளே பொறுப்பேற்க வேண்டும்.

கௌசல்யன் கடந்த வாரம் கிளிநொச்சிக்கு வருகை தந்து கடற்கொந்தழிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும், பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் குறித்தும் தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசனை செய்திருந்தார். நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கிளிநொச்சிக்கு வருகைதந்து விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது அந்தக் கலந்துரையாடலில் இ.கௌசல்யன் பங்குபற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பிற்கு திரும்பிச் சென்று கொண்டிருந்த போது, கௌசல்யன், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, 4 போராளிகளும் படுகொலை செய்யப்பட்ட செயலுக்கு முழுமையாக அரச படையே பொறுப்பேற்க வேண்டும்.

கடற்கொந்தளிப்பால் தமிழர் தாயக மக்கள் பெரும் உயிரிழப்புக்களையும், உடமையிழப்புக்களையும் அடைந்துள்ள இந்த வேளை அந்தப் பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்கும் பணியிலேயே விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றமை அனைவரும் அறிந்ததே.

கௌசல்யன் அந்தப் பணியிலேயே முழுமையாக ஈடுபட்டு வந்தார். இந்தச் சூழ்நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பது தமிழ் மக்களை ஆழமான கவலை கொள்ளச் செய்துள்ளதுடன் ஆத்திரமடையவும் செய்துள்ளது. இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுமானால் விடுதலைப் புலிகள் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள மக்கள் நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்தும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராகிய தாங்கள் அந்தக் கொலைகள் தொடர்பாக பூரணமான விசாரணையை நடத்தி உண்மை நிலையை வெளிப்படுத்தவேண்டும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

மன்னார் - வெள்ளாங்குளம் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

பிரதேச பொறுப்பாளர் குணதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் முன்னெடுக்கப்படவேண்டிய பொதுவான வேலைத்திட்டங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

## பஸ்தரிப்பிடம் இல்லை

மாங்குளம் சந்திப் பகுதியில் பஸ்தரிப்பிடம் இன்மையால் பயணிகள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

துணுக்காய், ஒட்டுசுட்டான், ஏ-9 வீதி ஆகிய வீதிகளை இணைக்கும் மாங்குளம் சந்திப் பகுதியில் பஸ்தரிப்பிடம் இல்லை. இந்தச் சந்தியில் மூன்று வீதிகளாலும் பயணம் செய்யும் ஏராளமான மக்கள் பஸ்ஸுக்காக வெய்யிலில் காத்து நிற்க வேண்டியுள்ளது. சம்பந்தபட்டவர்கள இதைக் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# புனரமைப்பு பணி நடைபெற்று வரும் பாண்டியன்குளம் பாலிநகர் வீதி

முல்லைத்தீவு - பாண்டியன்குளம பாலிநகர் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் பாரிய குன்றும் குழியுமாகக் காணப்பட்ட பாண்டியன்குளம் - பாலிநகர் வீதியூடாக எந்த ஒரு வாகனமும் பயணிக்க முடியாத நிலை காணப்பட்டது.

நிறுவனம் ஒன்றினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 மில்லியன ரூபா நிதியில் இந்த வீதி புனரமைப்புக்கு ஒரு மில்லியன் ரூபாவும், சிராட்டிக்குளம் பிரதானவீதி புனரமைப்புக்கு ஒரு மில்லியன் ரூபாவும் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிதியிலேயே இந்த வீதி புனரமைப்புப் பணிகள் இடம் பெறுகின்றன.

## சமையற்பாத்திரம் வழங்க நடவடிக்கை

சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு சமையல் பாத்திரம் கொள்வனவு செய்வதற்கு ரூபா 2 ஆயிரத்து 500 வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மேற்கொண்டு வருகிறது.

இவர்களில சொந்த வீடுகளிலும, உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள குடும்பங்களுக்கு சமையல் பாத்திரம வழங்குவதற்கு ரூபா 2 ஆயிரத்து 500 கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டது. (21)

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## பெப்ரவரி 10

1763 : கர்நாடகப் போரை முடிவுக்குக் கொண்டுவந்த பாரீஸ் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. ஆங்கிலேயருக்கும் பிரான்ஷியருக்கும் இடையில் ஏழாண்டுகாலம் நடைபெற்ற இந்த போர் ஒப்பந்தம் மூலம் முடிவுக்கு வந்த இந்தப் போரின் பின்னர் பாண்டிச்சேரியும், சந்திரநாகோரும் ஆங்கிலேயரால் பிரான்சுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டன.

1865 : "லென்ஸ் விதி"யை உலகுக்குத் தந்த ரஷ்ய விஞ்ஞானி ஹென்றிக் பிரெடறிக் எமில் லென்ஸ் மரணமானார்.

1895 : பெற்றோலை எரிபொருளாகக் கொண்டு இயங்கிய லொறியின் வெள்ளோட்டம் பாரீஸில் நடைபெற்றது.

1912 : சத்திர சிகிச்சைகளின்போது கிருமிகளால் நோய்த்தொற்று பரவாமல் தடுக்கும் நச்சுத்தடை முறையைக் கண்டறிந்த பிரிட்டனின் மருத்துவவியலாளர் ஜோசப் பேரன் லிஸ்டர் மரணமானார்.

1920 : சுயாட்சிச் சட்டமூலத்துக்கு ஆதரவாக வட அயர்லாந்து வாக்களித்தது.

1921 : தேசியத்துக்கான கல்வியை அளிக்கவேண்டும் என்ற நோக்கில் "காசி வித்யா பீடம்" வாரணாசி என்ற இடத்தில் காந்தியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1923 : "எக்ஸ்ரே" யைக் கண்டறிந்த ஜேர்மனியைச் சேர்ந்த வில்ஹெம் கான்ராட் ரோன்ட்ஜன் மரணமடைந்தார். 1921 ஆம் ஆண்டில் பௌதீகவியலுக்கான முதலாவது நோபல் பரிசைப் பெற்றவர் இவராவார்.

1943 : சிறையில் அடைக்கப்பட்ட காந்தி, வரலாற்றுச் சிறப்புப்பெற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இந்த உண்ணாவிரதம் 22 நாட்கள் நீடித்தது.

1969 : அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், கலைஞர் கருணாநிதி தமிழக முதல்வராக பதவி ஏற்றார்.

1976 : கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

1993 : கருணைக் கொலை செய்வதற்கு நெதர்லாந்தில் சட்டபூர்வ அனுமதி வழங்கப்பட்டது. உலகில் இத்தகைய அனுமதி வழங்கிய முதல் நாடு இதுவாகும்.

தொகுப்பு - சந்துரு

# கிளிநொச்சி பிரமந்தனாறு பிரதேசத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை திறப்பு

கிளிநொச்சி - பிரமந்தனாறு தியாக தீபம் திலீபன் மருத்துவமனை திறப்பு விழா நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவின் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த மருத்துவமனையின் திறப்புவிழா நிகழ்வு சிறப்பு மருத்துவப் போராளி நாவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை பிரமந்தனாறு மகாவித்தியாலய அதிபர் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தமிழ்வாணன ஏற்றிவைத்தார். ஈகைச்சுடரை மருத்துவமனை சிறப்பு மருத்துவப் போராளி காயத்திரி, திலீபன் மருத்துவ சேவை பொறுப்பாளர் செ.நாயகன், மயில்வாகனபுர அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்துக்கான மலர்மாலையை மாவீரரின் தந்தையான பாலசுந்தரம், போர்ப் பயிற்சி ஆசிரியர் நேசன், பிரமந்தனாறு மாதர் சங்கத்தலைவி ஆகியோர் அணிவித்தனர்.

மருத்துவமனை பெயர்ப் பலகையை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் திரைநீக்கம் செய்து வைத்தார். மருத்துவமனை கட்டடத் தொகுதியை திலீபன் மருத்துவ சேவை மருத்துவ ஆலோசகர் வைத்தியகலாநிதி எழுமதி கரிகாலன் நாடாவை வெட்டித்திறந்து வைத்து நோயாளர்களைப் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வின் சிறப்புரைகளை பிரமந்தனாறு மகாவித்தியாலய அதிபர், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர், வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் இந்த கிராமத்தின் முக்கிய பிரமுகர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மீள் குடியமர்வுக் கொடுப்பனவை வழங்கக் கோரி வட்டக்கச்சி மக்கள் செயலகம் முன் போராட்டம்

இராணுவ நடவடிக்கைகளின் போது இடம் பெயர்ந்தவர்களுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மற்றும் பொது இடங்களில் வேலை செய்தமைக்கான நிவாரணம் ஆகியவற்றை வழங்கக்கோரி வட்டக்கச்சிப் பிரதேச மக்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் முன்பாக இரண்டாவது நாளாக நேற்றுமுன்தினமும் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் வட்டக்கச்சி, இராமநாதபுரம் மற்றும் மாவடி அம்மன் கோவிலடி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்தவர்களுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு நீண்டகாலமாக இதுவரை வழங்கப்படவில்லை. அத்துடன் வரட்சி நிவாரணம் தருவதாகத் தெரிவித்தும் வீதிகள், ஆலயங்களில் சிரமதானம் மற்றும் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுத்திய போதும் அவற்றுக்கான நிவாரணப் பொருட்களும் வழங்கப்படவில்லை.

இவற்றை வழங்குமாறு கோரியே தாம் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், தாம் மாவட்டச் செயலகத்தின் செயற்பாடுகளை முடக்கி போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்திருந்தபோதும் அரசியற்துறையினர் விடுத்த வேண்டுகோளை அடுத்தே அதனைக் கைவிட்டுள்ளதாகவும் அந்தப் பிரதேசத்தின் மாதர்சங்கத் தலைவி தங்கேஸ்வரி தெரிவித்தார்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்த அரச அதிபர் இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இராணுவ நடவடிக்கைகளின்போது பாதிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

எனினும் மேற்படி பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கை மற்றும் விமானத் தாக்குதல்களால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக போராடடத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

# மதுக்கடை இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - சேவையர் கடைச் சந்தியில் இதுவரைகாலமும் இயங்கிவந்த மதுபானக் கடை வேறிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் சேவையர் கடைச் சந்தியில் இருக்கும் கடைத் தொடர்களுக்கு அருகில் இந்த மதுபானக்கடை அமைந்திருந்தமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

தற்போது இந்த மதுபானக் கடை சேவையர் கடைச் சந்தியில் இருந்து மயானத்துக்கு செலலும் வீதியில் புதிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கடை இடமாற்றத்தை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

# புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் தாயகப் பகுதியை புனரமைக்க முன்வரவேண்டும்

## லண்டன் பொறியியலாளர்கள் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் பொறியியலாளர்களும், வைத்தியர்களும் மற்றும் பல்துறை சார்ந்த நிபுணர்களும் சுனாமியால் அழிவடைந்த வட- கிழக்கு தமிழர் தாயகப் பகுதியை மீள கட்டியெழுப்புவதில் பங்கெடுப்பதற்காக தாயகம் வரவேண்டுமென லண்டனைச் சேர்ந்த தமிழ் பொறியியலாளர்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த அலோசியஸ் மரியதாஸ் தெரிவித்தார்.

லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட இவர் சுனாமி மீள் புனருத்தாரண வேலைகளில் பங்குபற்றுவதற்காக சுயவிருப்பின் பேரில் லண்டனிலிருந்து வந்து முல்லைத் தீவிலே பணியில் ஈடுபட்டுள்ளார். இவருடன் இரசாயனவியற்துறை பொறியியலாளரான இவரது மனைவியும் கூட வருகை தந்துள்ளனர்.

முல்லைத்தீவிலே அமைக்கப்பட்டு வரும் தற்காலிக இருப்பிடங்கள் தொடர்பாக ஆலோசனைகளை தெரிவித்துவரும் இவரே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

வெளிநாடுகளிலே ஏராளமான தமிழ் நிபுணர்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைகளிலே நிபுணத்துவம் மிக்கவர்களாகவுள்ளனர். அவர்கள் அனைவருடையதும் சேவை தற்போது தமிழர் தாயகத்துக்கு தேவைப்படுகிறது.

இதனை கருத்திற்கொண்டு அவ்வாறான நிபுணர்கள் கட்டம் கட்டமாக தமிழர் புனர்வாழ்வு கழகம் ஊடாகவோ, தனியாகவோ தாயகம் வரவேண்டும். தமது சேவை நிறையவே தேவைப்படும் வேளையில் அதனை வழங்குவதற்கு முன்வரவேண்டும். இங்கு நீர் நிலைகள் கூட மோசமாக பாதிப்படைந்துள்ளன. இவற்றை மீள சீர் செய்வதிலும், புதிய கட்டடங்களை அமைப்பதில் புதுப்புது தொழில் நுட்பங்களை புகுத்துவதிலும் இந்த நிபுணர்களின் உதவி தேவைப்படுகிறது. எனவே வைத்தியர்கள் உட்பட அனைவரும் தமிழீழம் வருகைதரவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

(94)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## படுகொலைகளின் சூத்திரதாரிகள் படைத்தரப்புக்குள்ளேயே உள்ளனர்!?

வெலிகந்த படுகொலைச் சம்பவத்தில் ஆயுதப்படையினருக்கு எவ்வித தொடர்பும் கிடையாது. இதில் படைத்தரப்பினரைத் தொடர்புபடுத்திக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளமுடியாது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்கா வழமைபோன்று சம்பிரதாய பூர்வமாக தனது மறுப்பை வெளியிட்டு, தாங்கள் குற்றமற்ற புனிதர்கள் என நிருபிக்க முயன்றுள்ளார். நல்லது. ஆனால், 'எங்கப்பா குதிருக்குள் இல்லை' என்று கூறி அவர் குதிருக்குள் தான் மறைந்திருக்கிறார் என்பதை சுட்டிக்காட்டிய முட்டாள் போன்று, அவர் அழுத்திக் கூறிய வாசகங்கள் கச்சிதமாக அமைந்துள்ளன.

அதாவது, மேற்படி சம்பவங்களில் தமக்கோ, அல்லது தம்முடன் இணைந்து கைக்கூலிகளாகப் பணியாற்றிவரும் துணைப்படைக்குழுக்களுக்கோ எந்தவிதமான தொடர்பும் இல்லையென அவர் கூறிய கையோடு கருணா குழுவுக்கு இக்கொலையுடன் தொடர்பு இருப்பதற்கான சந்தேகம் கொள்வதற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாக உறுதிபடக் கூறியுள்ளதைக் கவனித்தால் பல செய்திகள் தெளிவாகும்.

கருணா குழுவுக்கு தொடர்பு இருப்பதாகச் சந்தேகிக்க ஆதாரம் உள்ளதென்றால் - படைதரப்புக்கு அதிக சம்பந்தமிருப்பதாகத்தானே அர்த்தப்படுகிறது.

கருணாவும் அவரோடு சேர்ந்து தமிழ்த்தேசிய விரோதிகளாகத் தம்மை பிரகடனம் செய்துகொண்ட சிலரும் யாரால் தப்பவைக்கப்பட்டார்கள், யாருடன் இணைந்துகொண்டார்கள், யாரிடம் சரணடைந்து புகலிடம் தேடினார்கள், யார் அவர்களைத் தமது அரசியல், இராணுவ நலன்களுக்குப் பயன்படுத்தினார்கள், யார் அவர்களை வைத்துப் பிரகடனம் செய்தார்கள் என்ற கேள்விகளுக்கெல்லாம் விடை என்னவென்பதை எல்லோரும் அறிவார்கள்.

இதில் எவருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இருக்கப் போவதில்லை. கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான சக்திகளை யார் அரவணைத்துக் கொண்டார்கள், யார் அவர்களுக்குத் துணைப்படை அந்தஸ்தை அளித்து அவர்களின் துரோகத்தனமான செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்பு வழங்கி, கைக்கூலிகளாகவும் - தலையாட்டிகளாகவும் மாற்றி குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்புகளாக அடையாளப்படுத்தினார்கள் என்பதற்கான விடையும் கடந்த காலங்களில் - பல்வேறுகட்டங்களில் சம்பந்தப்பட்டவர்களினாலேயே வெளிப்படுத்தப்பட்டமை ஒன்றும் ரகசியமான விடயமல்ல.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆயுதரீதியாக அடக்கமுயன்ற பேரினவாத அரசுகளும், அவர்களின் ஆயுதப்படைகளுமே அதன் பின்னணியில் செயற்பட்டார்கள், தற்போது செயற்பட்டும் வருகிறார்கள்.

ராசிக்குழு - வரதன்குழு - மோகன்குழு, எனப்பல்வேறு குழுக்களைத் துணைப்படைகளாக அங்கீகரித்து அவர்களைக் கருங்காலிகளாக இயங்க வைத்தவர்கள் யார் என விளக்க வேண்டிய அவசியமேயில்லை. இந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்களைப் பயன்படுத்தி L.R.R.P என்ற குறியீட்டுப் பெயர்கொண்ட நீண்ட தூரம் ஊடுருவித்தாக்கும் அணியொன்றை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் உருவாக்கி, தமிழர் தாயகத்தின் எல்லைப் பிரதேசங்களில் மறைமுகமாக இயங்கவைத்து அவர்கள் மூலமாக விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தளபதிகள் சிலரைத் தாக்கிய ஈனத்த வரலாற்று அயோக்கியத் தனத்தை தமிழ் மக்கள் இலகுவில் மறக்கமாட்டார்கள்.

இந்த L.R.R.P அணியைச் சேர்ந்தவர்களின் கதி பின்னாளில் என்னவாயிற்று என்பதும், அரசும், படைத்தரப்பும் அவர்களை எவ்வாறு அடையாளப்படுத்திவிட்டு மறந்துவிட்டது என்பதும் பரிதாபத்திற்குரிய வரலாறாகும்.

இந்தக் குழுக்களின் வரிசையில் மிக அண்மையில் தன்னை இணைத்துக் கொண்டது 'கருணா குழு' தான். இந்தக் குழுவினர் கடந்த பத்து மாத காலப்பகுதிக்குள், விடுதலை புலிகள் இயக்கத்தைச் சிதைப்பதற்கும் அந்த அமைப்பின் முக்கியஸ்தர்களை அழிப்பதற்கும், கிழக்கில் பிரதேசவாத வெறியை ஏற்படுத்தவும், அரச படையினரின் அங்கீகாரம் மற்றும் ஆதரவுப் பின்புலத்துடன் எத்தகைய கொரூரங்களை எல்லாம் செய்தார்கள் என்பதை மக்களே அறிவர்.

இத்தகைய குழுக்களுக்கும் - படைத்தரப்புக்கும் - அரசுக்குமான உறவு குறித்து எந்த விதமான சந்தேகமும் கிடையாது.


இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து ஆயுத பாணிகளாக நடமாடும் சுதந்திரம் வேறுவருக்கும் இல்லை. படைத்தரப்பை சார்ந்தவர்களுக்கே (அவர்கள் துணைப் படயாகவும் இருக்கலாம்) உண்டு.

அவர்களின் அனைத்து அனர்த்த செயற்பாடுகளும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் திட்டமிடப்பட்டவையே என்பதை ஆய்வாளர்கள் பலரும் உறுதி செய்துமுள்ளார். நிலையில் - இராணுவப் பேச்சாளரின் கருத்துக்களின் அடிப்படையில் பார்த்தாலும் கருணாகுழுவே இந்தப் படுகொலையில் இயங்கியதற்கு ஆதாரம் உண்டென்பது உறுதியாகின்றது.

எனவே, கருணா குழுவை இயக்கும் படைத்தரப்பே இதற்கான ஆதரவுப் பின்புலப் பாதுகாப்பை வழங்கியுள்ளது என்பதை இராணுவப் பிரிகேடியரின் கூற்று உறுதி செய்வதாகவே அமைந்துள்ளது எனலாம் .

சமாதானத்தின் எதிரிகளும், போர் வெறியர்களும் ஆயுதப்படைகளில் நிறையவே உள்ளனர் என்பதையும், தேச விரோதக் குழுக்களுக்கு ஆதரவாக அவர்களே உள்ளதையும் இப்படுகொலைகள் மீண்டும் உறுதி செய்வதாகவே உள்ளன.

## நாடும் நடப்பும்



செய்தி: வெலிகந்த படுகொலைக்கு
ஐ.நா.செயலர் கொபி அனான் கண்டனம்.

## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# கௌசல்யனைக் கொன்றவர்கள் சாதிக்கப்போவது என்ன?

நண்டு கொழுத்தால் வளையில் இருக்காது என்று சொல்லுவார்கள். அதைப் போலத்தான் அம்மா திண்டு திண்டிட்டு இருக்கிற. ஆமிக்காரங்களுக்கும் அம்மா இருக்க முடிகிறதில்லை. என்று சொல்லிக் கொண்டே வந்தமர்ந்தார் பரமசிவம்.

எதைப்பற்றிச் சொல்லுகிறீர்கள்? என்றேன்.

போர் நிறுத்தம் என்று சொல்லி வருஷக் கணக்காய் சும்மா இருக்கிறாங்கள். தேகப பயிற்சி என்று சொல்லி ஓட்டம் பாச்சல் என வியர்க்க வியர்க்க வேலை கொடுத்தாலும் அவங்கள் சாப்பிடுகிற சாப்பாட்டுக்கு இதுபோதுமே? புலி என்று கிலிபிடிச்சு ஓடுகிறமாதிரி இந்தப் பயிற்சியில் ஓடுவாங்களா சொல்லும். அதனாலதான் வாகனங்களை ஓட்டிச் சென்று விபத்தில் சிக்கிக் கொள்வதும் தமிழர் தாயகத்தில் மக்கள் தமிழ்த் தேசியக் கொடியை ஏற்றினால் அதை இறக்க வேண்டுமென்று மல்லுக்கட்டி நிற்பதும் இப்படி ஏதாவது வம்புக்குப் போய் வில்லங்கத்தை விலைக்கு வாங்கிக்கட்டிக் கொள்வதும் வழமையாகிவிட்டிருக்கிறது. இப்போது கௌசல்யன் மீது கைவைத்துவிட்டு வழமை போலத் தங்களுக்கும் இதற்கும் எந்தத் தொடர்புமில்லை என்று ஆமிக்காரங்கள் மறுப்புத் தெரிவித்திருக்கினம். எல்லாவற்றையும் முதலில் மறுப்பது அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப் பட்டிருக்கும் பாடம் போலும்.

கிளிநொச்சியில் முக்கியமான உரையாடலில் கலந்து கொண்ட பின்னர் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் மற்றவர்களும் மட்டக்களப்புக்குத் திரும்பியபோதுதான் வெலிக்கந்தையில் அவர்கள் வந்த வாகனத்தைத் தொடர்ந்து வாகனம், வழிமறித்துத் தாக்குதல் நடத்தியிருக்கிறது. தாக்குதல் நடத்தியவர்கள் சீருடையணிந்தவர்கள் என்று இதில் காயமடைந்தவர் சொல்லியிருக்கிறார். இதுதவிர சம்பவம் நடந்த இடத்திலிருந்து முந்நூறு மீற்றர் தூரத்துக்குள் இராணுவ முகாம்களிலிருக்கின்றன. இவர்கள் பாதுகாப்புப்படைகள் என்று சொல்லப்படுகின்றது.

பாதுகாப்பதுதான் இவர்களது கடமை. இந்தப் பாதுகாப்புப் படைகளையும் மீறி ஒரு மோட்டார் வானில் வந்தவர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியிருக்கிறார்கள். பாதுகாப்புப் படைகளுக்குத் தெரியாமல் எப்படி இந்த மோட்டார் வானில் வந்தவர்கள் ஆயுதங்களுடன் வந்து தாக்குதல் நடத்தியிருக்கமுடியும்? சம்பவம் நடந்த சில நிமிடங்களிலேயே பாதுகாப்புப்படைகள் அந்த இடத்துக்கு வந்திருக்கின்றன.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் பாதுகாப்புப் படைகளை மீறி தப்பிச்சென்றிருக்க முடியாது. துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களை பாதுகாப்புப் படையினர் ஏன் பிடிக்கவில்லை. அல்லது அவர்கள் மீது இவர்கள் ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு யாருடையது? இப்படி கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டார் பரமசிவம்.

சுனாமி அனர்த்தத்தினால் விடுதலைப் புலிகளுக்கு பாரிய இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் ஆளணிப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் புலனாய்வுத்துறையைக் காட்டி கொழும்பு ஊடகங்கள் சில வாரங்களாகவே, எழுதித் தள்ளிக்கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகள் பலவீனமடைந்திருப்பதால் இதுதான் தருணமென்று படைத்தரப்பினர் புலிகளைச் சீண்டிப்பார்க்கிறார்கள் என்று சொல்லுகிறீரா என்று கேட்டேன்.

இது மட்டுமல்ல இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தப் பேச்சு இது தவறினால் பாகிஸ்தானுடன் பல ஒப்பந்தங்கள், அமெரிக்காவுடனும் பேச்சு, ஈரானுடனும் ஆயுதக் கொள்வனவு பற்றிய பேச்சு என்பதுடன் அம்மாவும் இந்த நாடுகளுக்கெல்லாம் நேரில் சென்று பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறார்.

படைத்தளபதிகளும் வெளிநாடுகளுக்குச் சென்று ஆயுதக் கொள்வனவு பற்றி பேச்சு நடத்தி வந்திருக்கிறார்கள்.

இவையெல்லாம் படைத்தரப்பினருக்கு சிறிது உற்சாகத்தை ஊட்டியிருக்கக்கூடும். முன்னரும் இப்படித்தான் புலிகள் நான்கு மாதங்கள் தொடர்ச்சியாக ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தம் செய்தபோது எங்களிடம் நவீனரக ஆயுதங்களும், போர் சாதனங்களும் இருக்கின்றன என்று அம்மையார்ளள அடிக்கடி சொல்லிவந்தார். போர்நிறுத்தம் செய்வதற்கு மறுத்தும் வந்தார் என்றார் பரமசிவம்.

இந்தத் துணிச்சலில்தான் எழுதுமட்டுவாளில் புலிகள் மீது தாக்குதல் நடத்தியது. கொழும்பு ஊடகங்களும் படைகள் முன்னேறிக் கொண்டிருப்பதாக செய்திகள் வெளியிட்டுக்கொண்டிருந்தன. இழப்பு அதிகமாகவே படைகள் பின்வாங்கின என்பதை மறந்துவிட்டார்கள் என்றேன்.

அவர்கள் மறந்திருந்திருக்கலாம். ஆனால் வெலிக்கந்தைத் தாக்குதல் சமபலத்தால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்துத்தாம் அச்சமடைந்துள்ளதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்திருப்பது கவனத்துக்குரியது. கௌசல்யன் கொலை பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். இது படைத் தரப்புக்கும் அரசுக்கும் தெரியும் என்றார் பரமசிவம்.

கௌசல்யன் ஒருவருடத்துக்கு முன்னர்தான் மணம் முடித்தார். புதிது புதிதாகக் கற்றுக்கொள்வதிலும் மிகுந்த ஆர்வமுள்ள கௌசல்யன் கணினியிலும் சமீபகாலத்தில் நன்கு பயிற்சிபெற்றிருந்தார். இவரைக் கொலை செய்ததன் மூலம் கொலையாளிகளும் இவர்களுக்குப் பின்னாலிருப்பவர்களும் என்ன இலாபமடைந்துவிடுவார்கள்? என்றேன்.

இதுவரை கருணாகுழுவைச் சாட்டி மட்டக்களப்பில் நடந்த கொலைகளினால் என்ன நன்மையைப் பெற்றிருக்கின்றனர். மட்டக்களப்பில் அம்பாறையில் ஒரு அங்குல நிலத்தைக்கூட இவர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கிறார்களா? என்று அரசியல் இராணுவ ஆய்வாளர் தராக்கி ஒரு கட்டுரையில் கேட்கிறார். சுனாமிப் பேரழிவினால் உறவுகளையும், உடைமை களையும் இழந்து அவலத்தில் நிற்கும் மட்டு - அம்பாறை மக்கள் இந்தக் கொலைகளைக் கண்டு அதிர்ச்சியும், எரிச்சலும், ஆத்திரமும் அடைந்துள்ளனர். சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியாளிக்க முன்வராத புலி எதிர்ப்பாளர்கள் இந்தக் கொலைகளின் மூலம் மக்களின் வெறுப்பையே சம்பாதித்துக் கொள்கின்றனர். மக்களுக்கு உருப்படியாக உதவி செய்தால் பரவாயில்லை. மக்களை மேலும் மேலும் துன்பத்தில் ஆழ்த்தும் காரியங்களையே செய்துகொண்டிருக்கின்றனர். இவர்கள் இந்தக் கொலைகள் மூலம் எதைச் சாதிக்கப்போகிறார்கள்? இந்த மட்டு - அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் தங்களது செயற்பாடுகளை இந்தக் கொலைகளைக் கண்டு நிறுத்திவிடப் போகிறார்களா? என்று கேட்டார் பரமசிவம்.

கொஞ்சம் பொறும் மக்கள் விரைவில் உணர்ந்துகொண்டு பதிலளிப்பார்கள் என்றேன்.

மக்கள் உணர்ந்துகொள்வதற்குக் கொழும்பு ஊடகங்களும் எங்கள் அரசியல் ''விற்பனர்களும்'' விடவேண்டுமே என்ற

## வாசகர் நோக்கு

# நெல்லியடி சந்தையை கவனிப்பாரில்லையா?

நெல்லியடிச் சந்தைக்கு இருவழிப்பாதைகள் இருக்கின்றபோதிலும் ஒருவழிப்பாதை தற்போது பாவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் வியாபாரிகளும், நுகர்வோரும் உள்ளே செல்வதிலும் வெளியேறுவதிலும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் உழவு இயந்திரங்களில் பொருட்களை எடுத்துச்செல்கின்றவேளையில் நெருக்கடி நிலை ஏற்படுவதுடன் சைக்கிள் பாதுகாப்புப்பிரிவுடன் முரண்படவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அத்துடன் சந்தையின் உட்பகுதியில் புடவைகள் விற்கப்படுவதால் சந்தையின் வெளிப்பகுதியில் உள்ள வர்த்தகர்களின் வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

அத்துடன் சில அயோக்கியர்கள் சந்தையின் மேல்மாடிப் பகுதிகளில் மாலை வேளைகளில் மதுபானம் அருந்திவிட்டு தகாத வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பெண்களுடன் தகாத வார்த்தைகளைப் பேசி வருகின்றனர்.

நெல்லியடி பிரதான வீதியில் வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் சைக்கிள்கள் மற்றும் விற்பனைக்காக பொருட்களை ஏற்றிவரும் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் வர்த்தகர்களின் விற்பனை பாதிக்கப்படுவதுடன் வீதிகளில் நெருக்கடி ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையை எடுக்க முன்வரவேண்டும்.

நெல்லியடி.

அகிலன்


பகுதி XXXIV — சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

மாங்கேணி செல்லும் வழியிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களைப் பார்த்துக் கொண்டு சென்றோம். இறுதியாக மாங்கேணியை அடைந்தோம்.

மாங்கேணியில் கடற்கரைக்கு எதிர்ப்புறமாகவே இடம்பெயர்ந்தோர் முகாம் அமைந்திருந்தது. அங்கு சுனாமிக்கு தன் இரு குழந்தைகளையும் தனது தாயையும் பறிகொடுத்த ஜி.எம்.சிறில் பெரேரா வயது 58 என்ற சிங்களவரைச் சந்தித்தோம். இவர் ஒரு தமிழ் பெண்ணைத் திருமணம் செய்தவர். இவர் அந்தப் பயங்கரம் பற்றி விபரிக்கையில் -

'நான் அந்த போக்கடியால் வாறப்ப என்ர மூத்த மகன் அன்ரனி பெரேரா-ரோட்டில புடவைக்காறனப் பாத்



திட்டு இருந்த. அப்ப அவன் 'தாத்தா தாத்தா ஓடி வாங்கோ தாத்தா' எண்டு சொல்லக்குள்ள திரும்பிப் பார்த்தன். 'கெதியா வாங்க தாத்தா! அலை தூக்கிவாற வரத்த பாருங்க! கெதியா வாங்க தாத்தா' எண்டு சொன்னான். திரும்பி பாத்தன். ஐய! அத இனி சொல்லிவேலயில்லை. அந்த நேரம் தென்னமரம் மாதிரி தூக்குப்பட்டு வருது.

நான் ஓடிப்போனன். ஐயா மகன் இட்ட அலை தூக்குற இடத்த வேற நாளயில விரியுறது. ஐயா! இது தூக்குப்பட்டே வருது.

அதுக்கிடைல இவ (மனைவி) குளிக்கப் போனவ. பொம்புள மக்கள் ரெண்டு பேரயும் குளிக்க வாங்க மக்காள். ஆச்சி அம்மா இருக்கட்டும் எண்டு கூப்பிட்டிருக்காவு. அவங்க-நீங்க போய் முழுகுங்க அம்மா. நாங்க ஆச்சிக்கு சோத்தக் குடுத்துட்டு நாங்களும் சாப்புடுறம் எண்டு அவங்க குசினிக்கையே இருந்துட்டாங்க ஐயா. அவங்களுக்குத் தெரியாது அலை தூக்குப்பட்டது. குசினி கடற்கரைப் பக்கம் மூடி இருந்தது. ரோட்டுப் பக்கம் வாசல் வச்சு. நான் இடையில் காட்டுக்குள்ளால விழுந்து மக்கள எண்டாலும் காப்பாத்த எண்டு ஓடினன். ஆனா அலை தூக்குப்பட்டது.

தூக்குப்பட்டதுதான் அப்பிடியே வந்து இடையில தான் காட்டுக்க விரிஞ்சது அலை. அந்தா விரிச்சு சல சல எண்டு வருகுது அலை. நான் முன்னுக்கு ஓடக்குள்ள - என்னை அடிச்சு உறுட்டி விட்டுது. இவவையும் (மனைவி) கிணத்தடியில இருந்தவ உறுட்டி விட்டுது. தம்பி (மவன்) அம்மா உருண்டு... ரோட்டில இழுத்தெடுத்துட்டுது. 'தாத்தா இந்தா பாருங்க அம்மா வந்துட்டாவு. இழுத்தெடுத்துட்டன் எண்டு சொல்லக்குள்ள - நானும் காயப்பட்டு வந்து ரோட்டுக்கு ஏறிட்டேன். நான் ஓடக்குள்ள அலை வந்து பனை மரத்தில ஒத்தப் போய் - கருக்கு மட்ட வெட்டிக்காயம். (காயங்களைக் காட்டுகிறார்)

இண்டைக்கும் இதுக்கு வாழைச்சேனைக்குப் போய் மருந்தெடுத்து வந்தன்.

தம்பி (மகன்) காணாம இருந்திருக்க - தூக்கி அடிச்சு அந்த வோசகுள்ள விழுத்தியிருக்கும். அந்த அவகட கதையும் சரி முடிஞ்சிருக்கும் என்று குறிப்பிட்டார்.

'அப்ப உங்கட மகள் மாரின்ர பாடென்ன? அவையின்ர பேர் என்ன என்று கேட்டேன். 'மூத்த மகன் பேரு ஜி.எம்.பிரியாணி பெரேரா. இளைய மகள் பேரு ரஞ்சினி பெரேரா. என்ட அம்மாட பேரு சிசிலின் பெரேரா. அவவுக்கு 85 வயசு. மூத்தவருக்கு 15 வயசு. இளைய மகளுக்கு 8 வயசு.

மூண்டு பேற்ற பொடியும் எடுத்தது. அந்த கோஸ்வே பள்ளத்தில மூத்த மகளட பொடி. கோஸ்வே ஓரத்தில் அம்மாட பொடி கிடந்தது.

அந்தக் குசினிக் கப்ப கட்டிப் புடிச்சாபோல கிடந்தா இளையவட பொடி. இந்த ஆலமரத்தடியில வலையில் சிக்கிக் கிடந்தது இளையவட பொடி. நாலு நாளைக்கு பிறகு தான் கண்டு பிடிச்சி எடுத்தது. ஊர் மக்கள் நல்ல உதவி செஞ்சாங்க தேடி தாறதுக்கு. (விம்பி அழுகிறார்)

இவ்வாறு கூறியவரிடம் மனப்பாரம் குறைய அழவிட்டு - சற்று நேரம் செல்ல 'உங்கட குடும்பத்தில எல்லாமா எத்தின பேர் என்று கேட்டேன். 'எல்லாமா ஆறுபேர். அம்மாவோடசேத்து மக்கள் மூணு பேர் நானும் இவவும் எனப் பதில் தந்தார்.

'உங்கட சொந்த இடம் எது? எனக் கேட்டதற்கு - 'எங்கட அம்மா அவங்கட தாத்தா களுத்துறை ஐயா. கல்பிட்டியவாதுவ அம்மாட தம்பி ஜஸ்ரின் பெரேரா எண்டு இங்க கரைவலை தொழில் செஞ்சிருந்த அவங்க கிட்டதான் தான் வந்து தொழில் செஞ்சிருந்த.

அவர் மோசம் போன புறவு மக்கள் போயிட்டாங்க. நாங்க இனி போக விரும்பல்ல. இங்க நான் கலியாணம் கட்டிட்டன். இனி எனக்கு சிங்களப் பகுதிக்கு போய் சீவிக்க ஏலாது. இவ (மனைவி) தனித் தமிழ் தானே கதைக்கிறது. இனி சிங்கள ஆக்கள ஒரு நேரத்துக்கு ஒரு குணம். தமிழ் கதைக்கிற ஆக்களோட சில நேரம் பிரச்சினை போட்டுக் கொள்ளுவாங்க. என்ட சகோதரமே பிரச்சினை போட்டது ஐயா. ஒருதரம் நான் போய் பொலநறுவையில நிக்கேக்க, மறுகா தூக்கி யெறிஞ்சு போட்டு இங்க வந்தனான்.

அப்படி நல்லா இருந்து, சீவிச்சுக் கொண்டு இருக்கேக்க - எண்ட மக்கள் ரெண்டு பேரயும் கடல் எடுத்துட்டு. அது தான் மனவருத்தமா இருக்கு ஐயா. தொடரும்....

அரசியற் கட்டுரை — பரணி

# சுனாமியைக் காரணம் காட்டி தொடர்ந்தும் பதவியிலிருக்க ஆசைப்படுகிறார் சந்திரிகா



சுனாமிக்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடு கிடையாது. பௌத்தர்கள், இந்துக்கள், கறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்ற மதவேறுபாடும் கிடையாது. அனைவருக்கும் பேரழிவைக் கொடுத்துவிட்டது. இதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்வாறு கூறுகின்றவர்கள் - இன்று ஆட்சி அதிகாரத்திலுள்ள சந்திரிகாவும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும். இந்த அனர்த்தம் பற்றிய இவர்களது கருத்துக்கள் - ஏதோ புதியகண்டு பிடிப்புக்களல்ல. இன, மத வேறுபாடுகளின்றி ஆட்சி செலுத்துவதாகக் கூறிவரும் இவர்கள் - சுனாமிபற்றிக் கூறுவது அரசியல் உள்நோக்கம் கொண்டதேயன்றி வேறில்லை. அரசு பாரபட்சம் காட்டாது எல்லோருக்கும் சமனாக உதவிகள் செய்வதாக உலகுக்குக் காட்டுவதற்கே இந்தக் கருத்தைக் கூறிவருகின்றனர். ஆனால் பேச்சுப் பல்லக்கு, தம்பி கால் நடை என்பதைப் பல வெளிநாட்டு ஊடகங்கள் புட்டுக் காட்டியுள்ளன.

தமிழர் பகுதிகளை வெளியுலகத்தினர் பார்க்க முடியாதவாறு தடுத்துக் கொண்டும், சிங்களப் பகுதிகளைக் காட்டிப் பெரும் சேதம் தெற்குப் பகுதிக்குத்தான் என்று, பரப்புரை செய்யவும் அரசு தயங்கியதில்லை. ஆனால், இதில் அரசுக்குப் பெரிய தோல்வி ஒன்று உண்டாகியுள்ளது. அதாவது - தமிழர் தாயகப்பகுதி வேறு, சிங்களம் வேறு என்பதைப் பிரித்து, யதார்த்த நிலையை உலகுக்குக் காட்டியமையே அரசின் தோல்வியாகும்.

அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளை அவசர அவசரமாக மீள் கட்டுமானம் செய்துவிட அரசு முனைவதற்கு வேறொரு காரணமும் உள்ளதாக அங்குள்ள சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர்.

காலி, அம்பாந்தோட்டை போன்ற நகர்களில் முஸ்லிம்கள் கணிசமான வணிகக் கட்டுமானங்களைக் கொண்டிருக்கின்றனர். இந்த விகிதாசாரம் புதிய நகரை வேறு இடத்தில் நிர்மாணிக்கும் பொழுதும் கவனிக்கப் படுமா? என்ற கேள்வி முஸ்லிம்கள் மத்தியில் எழுந்துள்ளது. சுனாமிக்கு இன,மத வேறுபாடுகள் தெரியாவிட்டாலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கொடுக்கும் வெளிநாடுகளுக்கு இன,மத வேறுபாடுகள் தெரியாவிட்டாலும், இங்கே இவற்றை நிர்வகிக்கும் ஆட்சியாளர்களுக்கு இன, மத வேறுபாடுகள் நிறையத் தெரிகின்றன.

இந்த வேறுபாடுகளை மாத்திரம் காட்டாது, அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியிலும் இந்த சுனாமி அழிவு சிங்களத்தில் தன் தோற்றத்தை வெளிப்படுத்தி வருகிறது. ஆளும் கட்சி முழு அளவில் தனது இலாபத்தை அடையவே விரும்புகிறது. இதனால் ஜே.வி.பியுடன் முரண்படவும் செய்கிறது. அரச உதவிகளை ஜே.வி.பி செய்வதாகக் கூறி, அரசியல் இலாபம் தேடமுயற்சிப்பதாகக் கூறி, ஜே.வி.பியினரின் செயல்களுக்கு அரச ஊடகங்களில் மறைமுகத்தடை விதிக்கப் பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பலத்தை அதிகரிக்கவே இந்த நடவடிக்கை என்று ஜே.வி.பியினர் குமுறுகின்றனர்.

அரசு எல்லாவற்றிலும் ஆளும் கடசியினரையே நியமித்து எதிர்க்கட்சியினரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கவில்லை என்று ஐ.தே.கட்சி குற்றம் சாட்டுகிறது. நாடளாவிய ரீதியில் அனர்த்தம் நடைபெற்ற பொழுதிலும் உதவிகள் சரியாக வழங்கப்படவில்லை என்று எதிர்க்கட்சி புட்டுக்காட்டி வருகிறது. இந்த நிலையில்தான் சந்திரிகா புதிய குண்டு ஒன்றைப் போட்டுள்ளார். ஐந்து ஆண்டுகளுக்கு எந்தத் தேர்தலும் இல்லை என்பதே அந்தக் குண்டாகும்.

எப்பொழுதும் அதிகார ஆசையில், அதிகார வெறியில் ஆழ்ந்திருக்கும் சந்திரிகா - இவ்வாறு கூறியிருப்பது ஆச்சரியப்படக்கூடியதல்ல. ஏற்கனவே ஜனாதிபதியின் பதவிக்காலம் எப்பொழது முடிவடைகிறது என்ற நெருக்கடி உள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005 டிசம்பருக்குள் நடத்தப்படவேண்டும் என்று ஒரு பகுதியினர் கூறி வருகின்றனர். ஆனால். சந்திரிகா 2006 ஆம் ஆண்டு டிசம்பர் வரை, தான் பதவியில் இருக்க முடியும் என்று கூறிவருகிறார்.

யாருக்கும் தெரியாமல், அமைச்சரவைக்கும் தெரியாமல் மூன்றாவது முறையாகத் தான் ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் எடுத்ததாகக் கூறி', அரசியல் சட்ட நெருக்கடியை உண்டாக்கியுள்ள சந்திரிகா - சுனாமியைக் காட்டி, இந்த நெருக்கடியையும் மறைத்துவிட்டு தொடர்ந்து பதவியில் இருக்க ஆசைப்படுகிறார்.

இதனால் சுனாமி அழிவைத் தேசிய அழிவு என்று காட்டித் தேர்தல் வைக்க முடியாத நிலை நாட்டில் உளளது என்று காட்ட முனைகிறார்.

பதவி ஆசை சிங்களத்தை ஆட்சி செய்த யாரைத்தான் விட்டுவைத்தது.

மக்களாட்சி என்ற பெயரில் தமது ஆட்சியின் ஆயுள்காலத்தை மக்களைச் சந்திக்காமல் நீடிப்பது இலங்கையின் வரலாற்றில் புதுமையல்ல.

1970 இல் ஐந்து ஆண்டு காலத்துக்கு நாடாளுமன்றத்துககு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர் மக்கள். ஆட்சிப் பொறுப்பேற்ற சந்திரிகாவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்க 1972 இல் புதிய குடியரசு யாப்பைக் கொண்டுவந்தார்.

புதிய அரசியல் யாப்பு நிறைவேறியவுடன் மக்களைச் சந்தித்திருக்க வேண்டும். தேர்தலை நடத்தியிருக்கவேண்டும். ஆனால் மக்கள் முன் செல்லாமல், 1972 இலிருந்து முதலாவது தேசிய அரசுப்பேரவையின் காலத்தை ஐந்து ஆண்டுகளாகத் தெரிவித்து 1977 வரை ஆட்சியில் நீடித்திருந்தார் சிறிமாவோ. 5 ஆண்டுகளுக்குத தெரிவானவர் - 7 ஆண்டுகள் தேர்தல் நடத்தாமல் பதவியை நீடித்தார்.

சிறிமாவோவின் இந்தச் செயலைக் கண்டித்தவர் அப்போது எதிர்க்கடசித் தலைவராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. இவர் சிறிமாவோவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தார். 1972 இல் வந்த அரசியல் யாப்பை மாற்றியமைத்தார். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை 1978 இல் கொண்டு வந்தார்.

பிரதம மந்திரியாக இருந்த தானே முதல் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக மாறினார். மக்களிடம் சென்று அதிகாரம் கேட்காமல், தானே ஜனாதிபதியாக நுழைந்து கொண்டார்.

இது மாத்திரமல்ல - அவர் செய்த மக்களாட்சிப் படுகொலை. நாடாளுமன்றத்தில் 3/4 பெரும்பான்மைப் பலம் இருந்துள்ளதால் 1983 ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய நாடாளுமன்றத் தேர்தலை சர்வசன வாக்கெடுப்பு என்ற பெயரில் நடைபெறாது தடுத்து, மக்களாட்சித் தத்துவத்தையே கேலிக்குள்ளாக்கினார்.

தேர்தல் நடைபெற்றால் எவருக்கும் 2/3 பலமே கிடைக்காத விகிதாசாரத் தேர்தலைச் சந்தித்தால், தான் நினைத்தவற்றை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்படும். எனவே சாவசன வாக்கெடுப்புமூலம் 3/4 பெரும்பான்மையுள்ள அரசைத் தொடர வைத்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவாகும்.

இரு பதவிக்காலங்களுக்கு ஆட்சியிலிருக்கும சநதிரிகா - பதவியை விட்டுப்போய் ஓயவாக இருக்க விருப்பமில்லாதவராக உள்ளார். ஏதாவது செய்து அரசியல் யாப்பைத் திருத்தி பதவியில் இருக்கப் பேரவாகொண்டுள்ளார். அதிகாரமுள்ள பிரதமராகப் பதவி வகிக்கலாமென்றால் அரசியல் யாப்பை எவ்வாறு திருத்துவது என்று திண்டாடுகிறார்.

மேலும் ஓராண்டு ஜனாதிபதியாக இருந்து பின்னர் ஏதாவது செய்து எதிர்க்கட்சிகளை உடைத்து விலைக்கு வாங்கி அரசியல் யாப்பைத் திருத்தலாம் என்றால் அதற்கும் தடை வருகிறது. 2005 இல் எப்படியும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும் என்கிறது ஐக்கிய தேசியக்கட்சி. எனவே இவற்றிலிருந்து மீளவும் வேண்டும் பதவியிலும் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும்.

இதற்காகவே சுனாமி அழிவைக் கையிலெடுத்துக்கொண்டு - தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு இல்லை. அதைப் பற்றிய சிந்தனையை விட்டுவிடவேண்டும் என்கிறார் சந்திரிகா. சுனாமியால் குழம்பிப்போயுள்ள சிங்கள மக்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது சந்திரிகாவின் இந்தக் கூற்று.

தமிழ் மக்களைப் பார்த்து சனநாயக நீரோட்டத்துக்குள் வாருங்கள் என்று கூறும் உலக நாடுகள் சந்திரிகாவின் இந்த ஜனநாயக விரோதப் போக்கைப் பற்றி வாய்திறக்கமாட்டார்கள். ஏனெனில் அந்த நாடுகளுக்குத் தங்கள் நலமே மிக முக்கியம். ஜனநாயகம் என்ற போர்வைகள் எதேச்சாதிகாரம் நடந்தாலும் அந்த நாடுகள் கவலைப்படப் போவதில்லை. கவலைப்பட்டதுமில்லை.

தமக்குப் பிடித்தவர் ஆட்சியில் இருந்தால் அது ஜனநாயகமாகவும் இருக்கலாம். சர்வாதிகாரமாகவும் இருக்கலாம் அதுதான் அந்த நாடுகளின் கொள்கை. ஆனால் சிங்கள மக்கள் குறிப்பாகச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது. வெளிநாடுகள் கொடுக்கும் உதவிகளை வைத்துக்கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் அரசியல்வாதிகளைப் பற்றி விழிப்பாயிருக்கவேண்டும்.

இன்னுமொரு சுனாமி வந்தால்கூட அதில் ஆதாயம் தேடும் நபர்களாகவே இவர்கள் இருப்பார்களேயன்றி மக்களின் துயரங்களைக் கொண்டு கவலை அடைபவர்களாக இவர்கள் இருக்க மாட்டார்கள்.

## தவக்கால நற்சிந்தனை




'ஒருவர் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன ?' (லூக் 9:25)

நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நாம் செய்யும் செயல்களும், பேசும் பேச்சுக்களும் நம் உள்ளத்தில் ருந்து எழும் குரலுக்கேற்பவே அமைகின்றது. நாம் எவ்வளவு தான் பணம், புகழ், பெரும் பதவிகளிலிருந்தா லும், நமது செயற்பாடுகளில் நேர்மையற்றவர்க ளாய், உண்மையற்றவர்களாய் பொறாமையும் பேராசையும், புழிவாங்கும் தன்மையும் இன்னும் நமது வாழ்வைக் குலைப்பதற்கு வேண்டிய எல்லாத் தீய நாட்டங்களும் கொண்டவர்களாய் நாம்வாழ்வோமாயின், நமக்குக் கிடைக்கும் பயன் என்ன? ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும், தம் வாழ்வையே இழப்பாரெனில் கிடைக்கும் பயன் என்ன? நடக்குக் கிடைத்த பணம் பதவி புகழ் யாவும் வீனே. இவற்றைக் கொண்டு சிறிது காலம் சிலரை விலைக்கு வாங்கி, அதிகாரம் செய்து, அடக்கி ஆனந்தமாய் வாழ்வது போல் தோன்றலாம். ஆனால் இந்த வழவு நிலையான, நிறைவான வாழ்வாய் அமைந்துவிடாது. — மோ.தார்சீயஸ்

## குவைத் சிறையில் இருந்த —
# கிளர்ச்சிவாத குழுத் தலைவர் மாரடைப்பால் மரணமானார்!

குவைத்தில் அமெரிக்கப் படையினர் மற்றும் வெளிநாட்டவர்கள் கடத்தலில் தொடர்புடையவர் எனத் தெரிவித்து கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த கிளர்ச்சிவாத தலைவர் மாரடைப்பால் மரணமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



அமர் கலாப் அல் எனிசி என்பவரே நேற்று முன்தினம் மரணமடைந்ததாக குவைத் உள்துறை அமைச்சு தெரிவித்தது. எனிசியும் அவருடைய ஐந்து ஆதரவாளர்களும் தலைநகருக்கு தெற்கே தங்கியிருந்த வீட்டை படையினர் கடந்த மாதம் 31 ஆம் திகதி முற்றுகையிட்டபோது நடைபெற்ற மோதலில் எனிசி கைது செய்யப்பட்டதுடன் அவரது ஐந்து ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர்.

சுவாசப் பிரச்சினை காரணமாக எனிசி அவதிப்பட்டதாகவும், உடனடியாகவே அவர் இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் அங்கு அவர் மரணமடைந்து விட்டதாக குவைத் அரச ஊடகம் தெரிவித்தது.

சிறையில் இவர் மீது நடத்தப்பட்ட விசாரணையில் தமது அமைப்பு அல்கொய்டாவுடன் தொடர்பு வைத்திருந்ததை ஒப்புக் கொண்டதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கப் படையினர் மற்றும் வெளிநாட்டவர்களை கடத்தி அவர்களை கொலை செய்யும் காட்சியை வீடியோ பிரதி மூலம் காட்டியமை மற்றும் குவைத்திலிருந்து ஈராக் செல்லும் அமெரிக்க தொடரணி மீது தாக்குதல்களை மேற்கொண்டமை தொடர்பாக இவர் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

## பெண் எனக் கூறிய ஆண் போட்டியாளர் கைதானார்

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் தான் ஒரு பெண் என்று கூறிவந்த ஆண் ஒருவர் மீது சிம்பாப்வே பொலிஸார் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இவர் ஈட்டி எறிதல் குண்டெறிதல் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி ஐந்து தங்கப் பதக்கங்களைப் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது ஆண் பெண் உறுப்புக்களுடன் தான் பிறந்ததாகவும் மருத்துவர் ஒருவரின் அறிவுறுத்தலுக்கமைய பெண் குணங்களைக் கொண்டு செயற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். எனினும் இவர் மருத்துவ பரிசோதனையின் பின் ஆண் என நிரூபிக்கப்பட்டுள்ளார்.

## காய்ச்சல் காரணமாக
# நேற்றைய விபூதி திருப்பலியில் பாப்பரசர் பங்குபற்றவில்லை!



காச்சலால் பீடிக்கப்பட்டு ரோமிலுள்ள ஜெமிலி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் நேற்று வத்திக்கானில் இடம்பெற்ற விபூதி திருப்பலியில் பங்குபற்றவில்லை. இது கடந்த 26 வருடத்தில் பாப்பரசர் முதன்முறையாக பங்குபற்றாத திருப்பலி நிகழ்வாகும்.

பாப்பரசருக்குப் பதிலாக அமெரிக்க கர்தினால் ஜேம்ஸ் ஸ்ராவ்வோட் இந்த திருப்பலியை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த முதலாம் திகதியிலிருந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாப்பரசர் அங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டாரா என்பதனை வத்திக்கான் அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

எனினும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையின் ஜன்னல் ஊடாக யாத்திரிகர்களுக்கு பாப்பரசர் ஆசி வழங்கினார். பாப்பரசர் ஒவ்வொருநாளும் வைத்தியர்கள் மற்றும் தாதிமார்களுக்கு ஆசிவழங்கி வருவதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

தனது நோய் காரணமாக பாப்பர்சர் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறலாம் என தகவல்கள் வெளிவந்த நிலையில் பாப்பரசர் பேசும் சக்தியை இழந்தாலும் தனது கடமையை தொடர வேண்டுமென வத்திக்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.




## செய்தியாளர் சுட்டுக்கொலை

ஈராக்கில் அமெரிக்காவின் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட அராபிய தொலைக்காட்சியின் செய்தியாளரும் அவரது 8 வயது மகனும் ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ராவில் கிளர்ச்சிவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

செய்தியாளரான அப்டெல் ஹிசைன் காசல் மற்றும் அவரது 8 வயது மகனான கறர் ஆகியோரே நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் பஸ்ராவிலுள்ள தமது வீட்டிலிருந்து சென்ற வேளையே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அல் – குரா என்ற இந்தத் தொலைக்காட்சி சேவை கடந்த வருடம் அமெரிக்க காங்கிரஸ் வழங்கிய 62 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அல் – ஜசீரா மற்றும் அல் அராபியா பாணியில் அமைக்கப்பட்டது. இதன் நோக்கம் ஜனநாயகத்தை வளர்த்தெடுப்பது மற்றும் அமெரிக்கா தொடர்பான கருத்தை அராபிய மக்களிடம் அறிவது போன்றவற்றுக்காகவே உருவாக்கப்பட்டதாகும்.

# பாலியல் வல்லுறவு வழக்கில் அமெரிக்க பாதிரியார் குற்றவாளி

சிறுவனிடம் பாதிரியார் தவறான உறவு வைத்திருந்தது உண்மையே. அவர் குற்றவாளி. தண்டனைக்கு உரியவர் என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அமெரிக்க கத்தோலிக்க பாதிரியார் போல் ஷான்லி 74 வயதான இவர் மீது பாலியல் வல்லுறவு தொடர்பாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர் பாதிரியார் பணியிலிருந்து நீக்கப்பட்டார். இவர் மீது மாசா சூட்ஸ் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் 10 ஆண்டுகளில் இவர் ஒரு சிறுவனை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகவும்வழக்குத் தொடரப்பட்டது. அந்தச் சிறுவனுக்கு இப்போது 27 வயதாகிறது. தீ அணைப்பு வீரனாக இருக்கிறார்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஸ்ரீபன் நீல் , பாதிரியார் குற்றவாளி என்று தீர்ப்புக் கூறினார்.

அவருக்கு வழங்கப்பட்ட பிணை மனுவையும் நீதிபதி ரத்துச் செய்தார். அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம். இவருக்கான தண்டனை என்ன என்பதை எதிர்வரும் 15 ஆம் திகதி அறிவிப்பதாக நீதிபதி கூறினார்.

சிறுவனைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியது கண்ணியமற்ற செயலில் ஈடுபட்டது உட்பட பல்வேறு குற்றப்பிரிவுகளின் கீழ் அவர் குற்றம் செய்ததாக நீதிபதி தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.

தீர்ப்பைக் கேட்பதற்காக அந்த தீயணைப்பு வீரர் தன் மனைவி மற்றும் குடும்பத்தினருடன் நீதிமன்றுக்கு வந்திருந்தார். தீர்ப்பைக் கேட்டபோது அவர் கண்களில் கண்ணிர் வழிந்தது.

தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக அவரது பாதிரியாரின் சட்டத்தரனி பிராங் மோன்டனோ கூறி யுள்ளார்.

## இராணுவத்தினரின் பின்னணியுடன்
# தாக்குதலுக்கென நீண்டகாலம் தயாராகிவந்த ஆயுதக் குழுவினர்

(மட்டக்களப்பு)

மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் படுகொலைச் சம்பவத்தை அடுத்து பொலநறுவை எல்லைக் கிராமங்களை மையமாகக்கொண்டு இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் ஆதரவுடன் இயங்கும் ஆயுதக் குழுக்களின் அட்டகாசங்கள் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவின் சகோதரர் றெஜி விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து புலிகள் மீதான பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும் இந்த ஆயுதக் குழுக்கள் திட்டமிட்டிருந்தன.

இதற்குத் தருணம் பார்த்துக் காத்திருந்தே கௌசல்யன் மீதான தாக்குதலை நடத்தியிருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வாரங்களாகவே பொலநறுவை எல்லைக் கிராமங்களை அண்டிய முஸ்லிம் பிரதேசங்களில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் மிகையாகக் காணப்பட்டதென்றும் இவர்களது நடமாட்டம் குறித்து வெளியில் தகவல்கள் கசிந்துவிடாமலிருக்க அந்தப் பிரதேசங்களில் அரச படையினரின் உதவியுடன் திடீர் ஊரடங்குச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன என்றும், அங்கிருந்து வழக்கமாக வெளியிடங்களுக்குச் சென்றுவருவோர் கடத்திச் செல்லப்பட்டு மிரட்டப்பட்டு வந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தாம் ஆயுதக் குழுக்களால் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்பட்டு வருவதாக கடந்த வாரம் அப்பகுதி முஸ்லிம் மக்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதேவேளை, கடத்தல், ஊரடங்கு போன்ற வேலைகளை புலிகள்தான் மேற்கொள்கிறார்கள் என்ற வதந்தியையும் பரப்பிய இந்த ஆயுதக் குழுக்கள் தமிழ் - முஸ்லிம் உறவுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்தும் காரியங்களிலும் ஈடுபட்டு வந்ததாகத் தெரியவந்துள்ளது.

மாங்கேணிக்கு மேற்காகவுள்ள பொலநறுவை எல்லைக் கிராமமான ஒமடியாமடு என்ற இடத்தில் இராணுவத்தின் பாதுகாப்புடன் இந்த ஆயுதக்குழுக்கள் இயங்கி வருவதாக சுனாமி அனர்த்தத்தை அடுத்து ஒரு தகவல் வெளிவந்திருந்தது.

சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற அன்று மாங்கேணியில் இருந்து தப்பிய ஒரு பயணிகள் பஸ் வெலிக்கந்தைக்குச் சென்று அங்கிருந்து வாழைச்சேனைக்குச் செல்லலாம் என்ற நம்பிக்கையில் திக்குத் திசை தெரியாமல் ஒமடியாமடுப் பகுதிக்குள் சென்றிருந்தது.

இந்தப் பயணிகள் பஸ்ஸை நிறுத்தி அதிலிருந்து அனைவரும் இறக்கப்பட்டு அவர்களில் எவராவது புலி ஆதரவாளர் உள்ளனரா என்பதை அறிய துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர். அப்படி விசாரித்ததில் ஒருவர் அந்தக் குழுவினரால் பிடித்துச் செல்லப்பட்டார். மிகுதிப் பயணிகள் விடுவிக்கப்பட்டனர். பிடித்துச் செல்லப்பட்ட அந்த நபர் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பொலநறுவை வெலிக்கந்த ஏ - 11 வீதி 103 மற்றும் 104 மைல் கற்களுக்கிடையில் பிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்ற சம்பவத்துக்கும் அரசுடன் சேர்ந்து இயங்கும் இந்த ஆயுதக்குழுக்கள் மேற்கொண்டுள்ள இந்தப் படுகொலைக்கும் நிறையத் தொடர்புகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கருணா குழு என்ற பெயருடன் உள்ள ஓரிருவர் மட்டக்களப்பு பற்பொடி முகாமில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் பாதுகாப்புடன் உள்ளனர் என்று மட்டக்களப்பு மக்கள் தெரிவிக்கின்றனர். பத்திரிகையாளரும் நாட்டுப்பற்றாளருமான ஜி.நடேசன் படுகொலை மற்றும் கருணா விடுதலைப் புலிகளால் நீக்கப்பட்டதை அடுத்து- கிழக்கு மாகாணத்தில் இருந்து யாழ்.மக்கள் துரத்தப்பட்டமை ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்த பிள்ளையான் மற்றும் இனிய பாரதி ஆகியோர் இந்த முகாமிலேயே உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரின் பற்பொடி முகாம் காலாகாலமாக தமிழ் மக்களின் போராட்டத்துக்கு எதிரான ஆயுதக் குழுக்களுக்கு கம்பளம் விரித்த முக்கிய முகாம் என்பதும், புளொட் மோகனும் ஒரு காலத்தில் இங்கிருந்து செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

புலிகள் அமைப்பில் இருந்து கருணா குழுவினர் நீக்கப்பட்டதன் பின்னர் மட்டக்களப்பு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சேனாதி, அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளரும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளருமான பாவா ஆகியோரின் கொலையை அடுத்து அரசியல் துறையினரை நோக்கிய அடுத்த இலக்காக கொளசல்யன் குறிவைக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகள் மீதான தாக்குதல் பாரிய போர்நிறுத்த மீறலாகும்
## கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவை தெரிவிப்பு

வெலிக்கந்தவில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட நான்கு போராளிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பாரிய யுத்தநிறுத்த மீறல் என கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக குழுவின் தலைவருக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது வாழ்வுரிமைக்காக தம்மையே அர்ப்பணித்து செயலாற்றிவரும் எமது தேசத்தின் பிரதிநிதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிப்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாது இருப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களில் தீயசக்திகள் செயற்படுவார்களாயின் அந்த சக்திகளுக்கு எதிராக கல்விச் சமுகத்தின ராகிய நாம் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிவரும் எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உச்சக்கட்ட பொறுமையை புலிகள் கடைப்பிடிக்கவேண்டும்

## நோர்வே தூதுவரிடம் ஹக்கீம் தெரிவிப்பு

நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பு ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் சுமார் ஒரு மணித்தியாலமாக இடம்பெற்றது. இதன் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு.அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொலையானது கண்டிக்கத்தக்கது என ஹக்கீம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் போர்நிறுத்த உடன்பாட்டை பாதிக்கும் அளவுக்குச் சென்றுவிடக்கூடாது என்பதை வலியுறுத்திய அவர் - இதில் தமிழீழ விடுதலைப் புலிகள் உச்சக்கட்டப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் - முஸ்லிம் பிரதேசங்களைக் காட்டிலும் தென்னிலங்கைப் பகுதிகளில் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெறுகின்றன. இது தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. இந்த நிலையில் சுனாமியின் பின்னரான புனரமைப்பு பணிகளுக்காக வடக்கு - கிழக்கில் இணைப்பு கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற விடயத்தில் ஐரோப்பிய நாடுகள் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்கின்றபோதிலும் ஜப்பான் மாற்றுக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது.

எனவே, அது தொடர்பில் தாம் ஜப்பானிய விசேட தூதர் யசுசி அகாசியுடன் இன்று பேசவுள்ளதாகவும் ஹக்கீம் குறிப்பிட்டார். (01)

### கூட்டமைப்பு...

சுனாமி விவாதத்தின்போது கௌசல்யன் கொலையைக் கண்டிக்கும் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றை கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் சபாநாயகரிடம் சமர்ப்பித்தார்.

இரா.சம்பந்தனின் உரையை அடுத்து கூட்டமைப்பு எம்.பிக்கள் சிலர் சபாநாயகருக்கு முன்பாகச் சென்று கோஷமிட்டனர். இதனால் சபையில் சிறிது நேரம் அமளிதுமளி ஏற்பட்டது. பத்து நிமிட நேரம் சபை ஒத்தி வைக்கப்பட்ட பின்னர், சுனாமி அனர்த்தம் குறித்த விவாதம் நடைபெற்றது.

### கதறி அழுது...

அரசியற்துறை பணிமனையில் வைக்கப்படும் வித்துடல்கள், அங்கிருந்து மட்டக்களப்பு நகரிலுள்ள அரசியல பணிமனைக்கு எடுத்துவரப்பட்டு, பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கிரானுக்கு கொண்டு செல்லப்படும்.

பின்னர் அங்கிருந்து கொடுவாமடு பாலம் ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்கு மீண்டும் கொண்டு செல்லப்படும்.

விடுதலைப் புலிகளின் தளங்களில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும் வித்துடல்கள், இன்று மாலை தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும் என விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கௌசல்யன்...

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைதியைப் பேணவேண்டும். 2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு போர்நிறுத்த உடன்பாட்டை மீறாத வண்ணம் அமைதியையும் பொறுமையையும் அனைவரும் பேணிக்கொள்ள வேண்டும்.

இதன்மூலமே இலங்கையின் நீண்டகால நோக்கிலான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்று கொபி அனான் தெரிவித்திருப்பதாகவும் -

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் அவர் தெரிவிததுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

### அவசரகாலநிலை...

முடிவு எக்கப்பட்டது. சுனாமி கடல் அலை பாதிப்பின் பின்னர் ஜனாதிபதியால் இந்த அவசரகாலச் சட்டம் நாட்டின் 14 மாவட்டங்களில் அமுலாகும் வகையில் பிறப்பிக்கப்பட்டது. இலங்கை யாப்பின் 155 ஆவது சரத்தின்படி அவசரகாலச் சட்டமானது அமுல் செய்யப்பட நாடாளுமன்றத்தின் அனுமதி தேவையாகும்.

அந்த சட்டத்தை நீடிக்க வேண்டுமானால் 14 நாட்களுக்கு ஒருமுறை நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்பதும் இலங்கை யாப்பின்படி தெரிவிக்கப்பட்ட விடயமாகும். (01)

### கிழக்கு...

கண்டனப்பேரணி வாகரை பிரதேச செயலகம் சென்று அங்கு ஜனாதிபதிக்கான மகஜரைக் வாகரைப் பிரதேச செயலிடம் கையளிக்க ஏற்பாடாகியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

விடிவெள்ளியின் பிரகாசம் விரைவில்
2 ஆம் பக்கம் பார்க்க

# விமர்சனங்களை முன்வைப்பதைவிட ஒதுங்கிச் செல்வதே கௌரவமானது

## விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கூட்டணிக் கட்சி என்ற வகையில் அரசாங்கம் ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அப்படி நடந்துகொள்ளவில்லை.

இது குறித்து ஆயிரம் விமர்சனங்களை முன்வைத்திருப்பதை விட அமைதியாக இருப்பதே கௌரவமானது என்றும் இதனால் சுனாமி அனர்த்தம் குறித்த விவாதத்தில் இது தெரியப்போவதில்லை என்று நாடாளுமன்ற ஊறுப்பினர் விமல் வீரவன்ச நேறறு நாடாளுமனறத்தில் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தம் குறித்த விவாதத்தின் ஆரம்பத்தின் விசேட உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் பேசுகையில் -

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பிரிவினைவாதிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. அரசாங்கமும் கட்சி என்ற வகையில் தாமும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுக்களில் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள கீழ் மட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக புரிந்து கொள்ளக் கூடியவர்கள் அல்லர்.

இதன் காரணமாகவே நிவாரணப் பணிகளில் பல குறைபாடுகள் இடம பெற்றிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரை விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகுள் செல்லாது இருக்கச் செய்ததைத் தவிர சுனாமியின் பெயரால் இடம்பெற்ற மோசடிகளை எம்மால் தடுக்க முடியவில்லை.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே சுனாமி தொடர்பான விவாதத்தில் எமது கட்சி பங்குபற்றவில்லை. வார்த்தைகளால் சொல்லக் கூடியதை விட மௌனத்தால் சொல்லக் கூடியதே அதிகம். இந்த நிலையில் எமது மௌனம் எதிர்காலத்தில் இலங்கையின் அரசியல் அத்தியாயத்தின் முகவுரையாக அமையலாம் எனவும் அவர் மேலும் தெரிவிததார்.

அதேவேளை சுனாமி அனர்த்தம் குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா சம்பந்தன் மா.க.ஈழவேந்தன், ந.ரவிராஜ், சுரேஸ்பிரேமச்சந்திரன், கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இவர்கள் தமது உரைகளில் சுனாமி நிவாரண நடவடிக்கையில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவது குறித்து கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

# புலிகளை கோபப்படுத்தும் செயல்களை இராணுவத்தினர் தவிர்க்கவேண்டும்!

## நாடாளுமன்றத்தில் சந்திரசேகரன்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளைக் கோபப்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதை இராணுவத் தரப்பினர் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பெ.சந்திரசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம் பெற்ற விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனை கொலை செய்தவர்கள் யார் என்பதை இதுவரை கண்டுபிடிக்காமை அரசாங்கம் பற்றியும், அரச உளவுப் பிரிவு தொடர்பாகவும் பல கேள்விகளை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளைக் கோபப்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதை அனைத்துத் தரப்புக்களும் தவிர்க்க வேண்டும். இந்தச் சம்பவம் சமாதான முயற்சிகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதோடு வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளை மாற்றியமைப்பதாக அமையலாம்.

இந்த நிலையில் ஜே.வி.பியினர் தமிழ்மக்களின் பிரச்சினைகளை புரியாமல் அல்லது புரியாதவர்கள் போல் நடப்பது நிலைமையை மேலும் சிக்கலாக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### பேபி 81

பிலுள்ள தனியார் மருத்துவமனையில் மரபணுப் பரிசோதனை நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை கல்முனை நீதிமன்றில் பதிவாளர் எம்.எச்.எ. நசீரின் பொறுப்பில் கல்முனை வைத்தியசாலையிலிருந்து கொழும்பிற்கு கொண்டுவரப்பட்ட குழந்தைக்கு மரபணுப்பரிசோதனை நடத்தப்பட்டது. இந்தக் குழந்தையின் பெற்றோர் எனத் தெரிவிப்போரும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்தப் பரிசோதனை தொடர்பான அறிக்கை இன்னும் இரண்டு வாரகாலத்தில் சமர்ப்பிப்பதாக இந்த நிலையத்தின் பணிப்பாளர் கூறியதாக நீதிமன்ற பதிவாளர் தெரிவித்தார். இந்த மரபணுப் பரிசோதனைக்குப் பின்னர் இந்தக் குழந்தை பொலிஸாரின் பாதுகாப்புடன் கல்முனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

### இளவரசர்...

இளவரசர் எதிர்வரும் 28 ஆம் திகதியிலிருந்து அடுத்தமாதம் 11 ஆம் திகதிவரை அவுஸ்ரேலியா, நியூசிலாந்து மற்றும் பிஜி ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்வுள்ளார். எனவே, அவரது இலங்கைக்கான விஜயம் இந்தத் திகதிக்கு முன்னர் அமையுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து இளவரசர் சாள்ஸ் விசேட அக்கறை கொண்டுள்ளாரென பிரிட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்தையிட்டு இளவரசர் சாள்ஸ் மிகுந்த கவலையடைந்துள்ளதுடன் மேலும் உதவிகளைச் செய்யலாமென ஆர்வத்துடன் உள்ளார். அத்துடன், தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் இளவரசர் அறிந்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 98.97 | 99.94 |
| ஸ்ரேலிங் பவுண் | 182.98 | 185.70 |
| யூரோ | 125.79 | 128.00 |
| சுவிஸ் பிராங் | 80.38 | 82.32 |
| யென் | 0.9328 | 0.9511 |

# உதவிகளை முறையாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## சந்திரிகாவிடம் உலகவங்கித் தலைவர் தெரிவிப்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென அரசசார்பற்ற நிறுவனங்களூடாக வழங்கப்படும் உதவிகளை முறையாகப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென உலகவங்கித் தலைவர் ஜேம்ஸ் வூல்பென்சன் ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் ஜனாதிபதி சந்திரிகாவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதியிடம் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கைக்கு கிடைக்கும் நிதி மற்றும் பொருள் உதவிகளின் உச்சப் பயனை மக்கள் பெறும் வகையில் திட்டங்கள் வகுக்கப்படுவது அவசியம். இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்புக்கென 7 கோடியே 50 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க உலகவங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்காலத்திலும் நிதியுதவிகள் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா -

சுனாமி பேரனர்த்தத்தைத் தொடர்ந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஆக்கபூர்வமான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கென திறைசேரி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகள் நடைமுறைப்படுத்துப்பட்டுள்ளதாகத் தெரிவித்தர்.

### தமிழ்ச்செலவன்...

பொறுப்பாளர் தமிழேந்தி, மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் மற்றும் தளபதி நாகேஸ் ஆகியோரே மட்டக்களப்புக்குச் சென்றுள்ளனர்.

தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெறவுள்ள இறுதி வணக்க நிகழ்வில் இவர்கள் பங்கேற்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்களை கிளிநொச்சி விளையாட்டரங்கிலிருந்து புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தளபதி கேணல் தீபன் உள்ளிட்ட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் வழியனுப்பி வைத்தனர்.

மட்டக்களப்பு செல்லும் வழியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் திருகோணமலை சம்பூருக்கு விஜயம் செய்தனர்.

சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட கட்டளைத் தலைமையகத்தில் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் மாவட்டத்தின் அரசியற்பிரிவினர், இராணுவப் பிரிவினரை அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 3.30 மணிமுதல் 4.30 மணி வரை இடம்பெற்றது.

இதையடுத்து ஹெலி மூலம் கரடியனாறு மகாவித்தியாலய மைதானத்தை பிற்பகல் 5 மணியளவில் சென்றடைந்த இந்தக் குழுவினர் கௌசல்யனின் மனைவி, தாயார் மற்றும் உறவினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினர்.

கொக்கட்டிச்சோலை அம்பிலாந்தோட்டையில் கௌசல்யனின் மனைவி புஸ்பாவையும் பண்டாரியாவெளியில் தாயார் மற்றும் மூன்று சகோதரிகளையும் சந்தித்து ஆறுதல் கூறினர். கடந்த ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி திருமணம் செய்த கௌசல்யனின் மனைவி 7 மாதக் கர்ப்பிணி என்பது குறிப்பிடத்தக்கது.

கரடியனாற்றை வந்தடைந்த புலிகளின் முக்கியஸ்தர்களான மாவடி முன்மாரிக் கோட்ட தளபதி ரமணன், மட்டு அம்பாறை நிர்வாகப் பொறுப்பாளர் பவான், மருத்துவப் பொறுப்பாளர் ரவிமோகன், சுனாமி நிவாரண திட்டமிடல் பணிப்பாளர் மார்ஷல் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தளபதி மிரேஸ், பல்லவன் ஆகியோர் வரவேற்றிருந்தனர்.



விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட அறுவர் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து நேற்று திருமலையில் இடம்பெற்ற ஹர்த்தாலில் நகரம் வெறிச்சோடியிருப்பதைக் காணலாம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.